தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு

இருபத்து ஆறாம் துணர்

திருவள்ளுவர் யாண்டு ௲கூஅக—அஉ

விகிருதி 1950—51

பொழிற்றொண்டர்: அ. கணபதி

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

தமிழ்ப் பொழில்

இருபத்து ஆறும் துணர்

உள்ளுறை.

திரு. காரழகன், வேலூர்.

உலக முப் பெருங் கவிகள்—145, 177.
உயிர்—217.
கீட்சு—121.
சாக்கிரடீசு—25.
சீத்தலைச் சாத்தனார்—57.
மாணிக்கவாசகரும் அறிவியலும்—97.
மெய்கண்டார்—363.
ஷெல்லி—295.

திரு. கிருட்டினசாமி நாயடு, பண்டிதர் அ.
கம்பரும் காந்தீயமும்—35.

திரு. குஞ்சிதபாத தேசிகர், வித்துவான் M.
உரை நூல்—255.
உள நூல்—55, 141, 191.
பொருந்துமா ?—143, 193, 215, 254 397.
குடநீராட்டுத் திருவிழாக்கள்–௨௯–௰௨ அட்டை.

திரு. சிதம்பரனுர், திருமந்திரமணி, துடிசைக்கிழார், அ.
யாழும் வீணையும்—317, 339, 377.

திரு. சுந்தரேசன், சங்கீதம், ப.
இசைத் தமிழ்—199, 259, 321.

சேர்க்கை.

தி. ஆ. அ. தே. உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி
ஆண்டு அறிக்கை—௨௬–௧.

திரு. சோமசுந்தரம் பிள்ளை, K., B. A., B. L.

இந்தியக் குடியரசியலும் மக்களியல்பும்—81, 127.
குண்டலகேசி—153.
துறவும் தவ வுருவும்—17.
நந் நாட்டுக் கொடி—245.
புலவர் தொழில்—185, 329.

திரு. ஞானரத்தினம், A.

சங்கம் கண்ட சம தருமம்—175.

திரு. தியாகராசன், கோ., G. M. V C.

ஆங்காங்கே—41, 209, 289, 393.
ஞால விளக்கு—165.
வட்டெழுத்தா அல்லது வெட்டெழுத்தா?—373.

திரு. திருநாவுக்கரசு, சோ., எம். ஏ., எல். டி.

ஜியார்ஜ் பெர்னார்டு ஷா —231.

திரு. துரைசாமி பிள்ளை, சித்தாந்த கலாநிதி
வித்துவான் ஔவை சு.

பட்டினத்துப் பிள்ளையார்—5, 47, 113, 137.
வெற்றிலை வாணிகர்—279.

திரு. நல்லொளியான், நா,

நாடும் மொழியும்—91,

திரு. பழநியப்பன் அ.

உருவமும் உள்ளொளியும்—387.
ஊழ் வினையும் உள் வலியும்—281.

பொழிற்றொண்டர் கருததுரைகள்.

அப்பர் திருநாள்—34,
அறிக்கை—198.
அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேரவைத்
தேர்வு—229.
ஆண்டுவிழா—371.
கலைமகள் விழா நிகழ்ச்சி—197
சென்னை மாநில முதலமைச்சர் வருகை—133.
ஞானசம்பந்தர் திருநாள்—73.
தமிழ்த் திருநாள் திருவிழா, ௨௬-ம் அட்டை.

தமிழ்ப்பொழில்—369.
தருமையாதின ஸ்ரீஞானபுரீசுவரர் ஆலயம் குடமுழுக்கு—135.
திருவள்ளுவர் திருநாள்—370.
திருவாதிரைத் திருநாள் சொற்பொழிவு—உகூ-ம அட்டை
துயரம—172, 274, 371.
தெய்வத்திரு, அம்பலவாண தேசிகர் சுற்றுப் பயணம்—169.
,, ,, வரவேற்பு—76, 105.
பத்தொன்பதாம் நூற்றுண்டுப் புலவர்கள்—369.
பாராட்டு—33, 338.
பிரிவு—உகூ-கூ அட்டை.
பிழை திருத்தம்—264.
புத்தாண்டு—1.
புலவர் கல்லூரி மாணவர் தேர்ச்சி—74.
பொங்கல் திருநாள்—313.
மகிழ்ச்சி—74, 337, 372.
மதிப்புரை—230, 269, 273, 275, 315, 357, 359, உகூ-மக அட்டை
மறைமலையடிகளார் மறைவு—170, 171. 223.
மாணவர் உணவு விடுதித் திறப்பு விழா—133.
வழியனுப்புக் கூட்டம்—134.
வெள்ளணி விழா—313.
வேண்டுகோள்—2.

திரு. பொன்னையா, வ., B. A. (Hons), Ph. D.
திருக்குறள் பொன்னுரைப்பகுதிகள்—9, 201.

திரு. மணிவாசகன், வித்துவான், சி.
கருங்கூத்து—287.

திரு. வரதராச ஐயர், E. S., B. A.
இரங்கற பாக்கள், 223, 327.

திரு. வெள்ளைவாரணர், வித்துவான், க.
பரத சாத்திரம்—233, 345.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௬ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௧ | மலர் ௧

விகிருதி—சித்திரை

1950—ஏப்பிரல்

பொழிற்றொண்டர் கருத்துரைகள்

திருவருள் நலத்தால் விகிருதி யாண்டு பிறந்தது. நம் பொழில் இருபத்தாறுவது ஆண்டும் தொடங்குகின்றது. நம் அன்பர்கள் எல்லாருக்கும் நமது மகிழ்ச்சியும் வாழ்த்தும் தெரிவிக்கின்றோம். புத்தாண்டில் மாரி மிக்கு விளைவு ஓங்கி வளங்கள் பெருகி அமைதியும் இன்பமும் ஒற்றுமையும் நிலவி, தமிழரசி தனியாட்சி சிறப்பதாக.

வேண்டுகோள்.

செந்தமிழ்த் தாயின் சீரிய மைந்தருள் ஒருவராகிய திரு. **அ. பொன்னணுக் களத்தில்வென்றூர்** என்பார், புலவர் உலகம் அறிந்து போற்றும் ஒரு தமிழாசிரியர்; சமய நெறியினர் அறிந்து போற்றும் சைவத்துறை அடியார்; யோகநிலை கைவந்த துறவித் தூயர்; தாம் அறிந்த உயர் நிலைகளை உலகிற்கு அறிவித்துப் பயன்படச் செய்ய எண்ணி முயலும் உலகத் தொண்டர் ஆகிய பெரியார்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம் சார்ந்த செங்கரையூர் எனும் செழிய ஊரில் பிறந்து சிறந்து விளங்கும் இவர், இராமநாதபுரம் அரசவைப் புலவராக விளங்கிய **வேலாயுதக் கவிராயர்** என்பாரால் ‘செங்கரை நகர்க்கு வேந்தர்’ என்றெல்லாம் சிறப்பிக்கப்பெற்ற குழந்தைக் களத்தில் வென்றூர் எனும் செல்வர் ஒருவரது பெயரர்; அறிவும்

திருவும்ஆற்றலும் உடைய உயர்குடிப் பிறப்பினர். பிறவித் துறவியாக விளங்கும் இவர், தமிழ்மொழிப் 'பயிற்சியைத், தம் ஊரிலிருந்தும் மதுரைத் தமிழ்ச் சங்கம் சென்றும் பயின்று புலமை எய்தியவர். சிறந்த சிவநெறிச் செம்மலாகிய இவர், சித்தாந்த நூற் பயிற்சியுடன், யோக நிலைக்குரிய இருக்கைப் பயிற்சி (ஆசனம்), உயிர்ப்புப் பயிற்சி (பிராணயாமம்) செய்யும் திறமைகளிலும் நன்குதேர்ந்தவர்.

அன்பர்கள் விருப்பிற் கிணங்கித், தஞ்சைப் பேதுரு உயர்நிலைப் பள்ளி, தஞ்சை மாவட்டக்கழக ஆட்சியைச் சார்ந்த குற்றாலம், திருவாரூர், ஒறுத்தான்நாடுகளி (உரத்த நாடு) லுள்ள உயர் நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராயிருந்து, மாணவ உலகிற்குச் சிறந்த பயன் விளைத்தவர். கரந்தைத் தமிழ்ச் சங்கப் பேரன்பராகிய இவர், அச் சங்கத்திலிருந்து, சிலகாலம் நற்றொண்டுகள் செய்திருந்தவர்.

தாம் பெற்ற அரிய நிலைகளை உலகிற்கு அளித்து உவக்கும் எண்ணம் சான்ற இவர், இப்பால் தம் சொந்த ஊராகிய செங்கரையூரில் தங்கி, ஊரவர் துணைகொண்டு மக்கட்குப் பெரும் பயன்படும் குளிர்நிழற்சாலை ஒன்று அமைத்தும், கல்விப் பயிற்சிக்குரிய பொதுநிலையம் ஒன்று அமைத்தும், அந்நிலையத்தில் திருவள்ளுவர் கழகம் நிறுவி, அரிய பலவாய தமது நூல்களையே அதன் நூனிலையமாக ஆக்கியும், அந்நிலையத்தே யிருந்து, எல்லோர்க்கும் அரிய அறிவு விளக்கங்கள் தரும் தொண்டுகள் புரிந்து கொண்டிருக்கின்றனர். அத்தொண்டின் பயனாகச் சிலர் வித்துவான் தேர்வு பெற்றுத் தமிழாசிரியராகி யுள்ளனர்.

மேலும், அன்பர்கள் வேண்டுங்காலை, வெளியிடங்களிலுள்ள சங்கங்கள், பள்ளிகள் முதலாய இடங்கட்குச் சென்று, அரிய விரிவுரைகள், இருப்பு நிலைக் காட்சிகள், அவற்றின் விளக்கவுரைகள் முதலாய தொண்டுகளும் புரிந்து வருகின்றனர்.

இப் பெரியார்தம் தொண்டுகள் நீடு நிலவுவனவாக!

இனி, இப் பெரியாரது தொண்டுகளின் சிறப்புக்களை எங்கணும் உள்ளார் இனிது உணர்ந்து, உணர்ச்சி நலம், உடல் நலங்களை எய்துமாறு ஆவன செய்ய நம் நாட்டினர் முயலுதல் வேண்டும். இவர்தம் அரிய விரிவுரைகளால், மிக நுணுகிய சிந்தாந்தக் கருத்துக்கள் எத்தகையோர்க்கும் எளிதின் விளங்குதலை அவற்றைக் கேட்டு மகிழ்ந்த யாவரும் நன்கு உணர்வர். அங்ஙனமே இவர் தம் யோக நிலை இருக்கை முதலியவைகளைக் கண்டு தெளிந்து அவ்வாறு செய்து வரப் பழகுவோர் எவரும், தாம் எத்தகைய நோயும் நீங்கப் பெற்றாராய், மிக்க வலியுறுதலைப் பழக்கத்தில் அறிவர். வேறு கூறல் என்னை? எழுபத்தொன்றும் ஆண்டினை எய்திய இப்பெரியார், இத்தகைய அரிய பயிற்சிகளை எளிதே செய்து காட்டலும், எத்தகைய முதுமைச் சோர்வும் எய்தாதிருத்தலுமே இவ்வுண்மைகளை உலகிற்குக் காட்டுவனவாகு மன்றோ!

இனி, இப்பெரியாரது தொண்டின் பயனை உலகிற்கு அளிக்கச் செய்யத் தகுவன, இரு செயல்களாகும்.

ஒன்று: இவர்தமை எங்கெங்கும் விரும்பி அழைத்து, அத்தொண்டுகளை இயற்றி விளக்கச் செய்து நேரில் யாவரும் கண்டும் கேட்டும் பயன்பெறச் செய்தல்.

இரண்டு: அத்தொண்டுகளைப் படக் காட்சி விளக்க உரைகள் கூடிய நூல் வடிவில் வெளியிடுமாறு செய்தல்.

இத் தொண்டுகள் இனிது நிறைவேற அன்பர்கள் ஆவன புரிந்தருள்வார்களாக!

பட்டினத்துப் பிள்ளையார்.

சித்தாந்த கலாநிதி. ஔவை. சு. துரைசாமி, அண்ணாமலைநகர்.

சைவத்திருமுறை பன்னிரண்டனுள் பதினோராந் திருமுறையிற் காணப்படும் நூலாசிரியன்மார்களான சான்றோர்களுள் பட்டினத்துப்பிள்ளையாரும் ஒருவராவர். இவர் பாடியனவாகக் கோயில் நான்மணிமாலை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாவொருபது என ஐந்து நூல்கள் பதினோராந் திருமுறையில் உள்ளன.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் காவிரிப்பூம்பட்டினத்தில் இவர் தோன்றி வளர்ந்து வாழ்ந்தவர்; இவர், பிற்காலத்தே துறவு பூண்டபின் சான்றோர்களால் பட்டினத்துப்பிள்ளையா ரென்று வழங்கப்படுவா ராயினர். ஆயினும், இவரது இயற்பெயர் திருவெண்காடர் என்பதாகும். (திருவிடை. 30). இவர், காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த சைவ வணிகர் குடியில் கடல் வாணிகம் செய்து மிக்க செல்வம் பெற்ற செல்வரொருவருக்கு மகனாராவர். திருவெண்காடருடைய தந்தை பெயர் சிவநேசர் என்றும் தாய் பெயர் ஞானகலாம்பை என்றும் கூறுவர்.

திருவெண்காடர், உரிய காலத்தில் திருமணம் செய்துகொண்டு, கடல் வாணிகம் செய்து, பெருஞ் செல்வராய் விளங்கினார். அவர்க்கு மருதவாண னென்றொரு மகன் பிறந்து, பதினாறாண்டளவும் இருந்து, பின் இறந்து போனான். அதனால் கவலை மிகக் கொண்ட திருவெண்காடர், திருவிடைமருதூரிலிருந்து வறுமை மிக்கு வருந்திவந்த ஆதிசைவர் ஒருவருடைய ஆண்மகவை விலைக்கு வாங்கி மருதவாண

னென்றே பெயரிட்டு வளர்த்து வந்தார். அவனும் அவருடைய உண்மை மகனாகவே வளர்ந்து சிறந்து கடல் வாணிகம் செய்து பெருஞ் செல்வம் ஈட்டித் தந்து, காதற்ற ஊசி யொன்றையும், 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்றெழுதிய ஓலை நறுக்கொன்றையும் கொடுத்துவிட்டு வெளிச் சென்று மறைந்து போனான். அதுகண்ட திருவெண்காட ருள்ளத்தில் துறவு பிறந்தது. அந்நாளில் அவரிடம் தலைமைக் கணக்கராய்ச் சேந்தனார் என்னும் சான்றோ ரொருவர் இருந்தார். வெண்காடர், தமது பெருஞ் செல்வத்தைப் பொது மக்கட்கு வழங்கி விடுமாறு சேந்தனாரைப் பணித்துக் கையில் ஓடும் அரையில் கோவணமும் கொண்டு வெளியேறினார். மருதவாணன் பிரிந்த சின்னாட்களில் வெண்காடருடைய மனைவியாரும் காலமாயினர். வெண்காடருடைய தாயமட்டில் உயிரோடிருந்த தனால், அவர்க்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்துவிட்டு, சிவபெருமான் எழுந்தருளும் திருப்பதிகட்குச் சென்று பரவி வழிபடும் செயலை அவர் மேற்கொண்டார். வீடுதோறும் சென்று ஓட்டில் உணவிரந் துண்டனர். அவருடைய உறவினர், வேந்தனைக் கொண்டும் வேறு தக்கோரைக் கொண்டும் அவர் உள்ளத்தை மாற்ற முயன்றனர்; சேந்தனாரைச் சிறையிடுவித்தனர்; திருவெண்காடருக்கும் நஞ்சு கலந்த உணவளித்துக் கொல்ல முயன்றனர்; ஒன்றாலும் திருவெண்காடருடைய உள்ளம் மாறவே யில்லை.

திருவெண்காடர், திருவிடைமருதூரில் சின்னாள் தங்கி இடைமரு திறைவனை வழிபட்டுக்கொண்டு வந்தார். அந்நாளில் அவருடைய தாயார் இறந்தனர்; அவர்க்குரிய இறுதிக் கடன்களைச் செவ்வே ஆற்றிவிட்டு மீளவும் திருவிடைமருதூர் சென்று சேர்ந்தார். அங்கே யிருக்கும்போது அவர் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையைப் பாடினார். பின்பு அவர் சீர்காழி, தில்லை, காஞ்சிமாநகர், காளத்தி முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொண்டு வடநாடு சென்றார்.

வடநாட்டில் பத்திராசலப் பகுதியில் மாகாளம் என்னு மோர் ஊரை யடைந்து, ஒருநாள் இரவு அங்கே யிருந்த பாழ்ங் கோயிலொன்றில் நிட்டை கூடியிருந்தார். அந்நாளில் அப்பகுதியைப் பத்திரகிரி யென்னும் குறுநில மன்னன் ஆண்டுவந்தான். அவனுடைய அரண்மனையில் களவு புரிந்த கள்வர் சிலர், திருவெண்காட ரிருந்த கோயிலுக்கு வந்து, தாம் திருடிவந்த அணிகலன்களுள் பதக்கமொன்றை யெடுத்து, அங்கிருந்த தெய்வத்துக்கு இடுவாராய் நிட்டையி லிருந்த திருவெண்காடர் கழுத்திலிட்டுச் சென்றனர். கள்வரைத் தேடிவந்த காவலர் பட்டினத்துப்பிள்ளையாரைக் கண்டு கள்வரெனக் கருதிக் கைக்கொண்டு சென்று கழு வேற்றத் துணிந்தனர். கழுமரத்தைப் பிள்ளையார் நோக்கி னர். உடனே அஃது எரிந்து சாம்பராயிற்று. அது கண்டு வியந்த காவலர் வேந்தனுக்குத் தெரிவித்ததும், பத்திரகிரி விரைந்தோடிவந்து பிள்ளையாரைக் கண்டு துறவு பூண்டு அவர்க்கு மாணவராய் அவர் நிழல்போல் தொடர்ந்து வரலானார். இருவரும் திருவிடைமருதூரடைந்து இறை வனை வழிபட்டு வந்தனர். வருகையில் பத்திரகிரியாரை நாயொன்று சுற்றிக் கொண்டு திரிந்தது.

திருவிடைமருதூரில், ஒருநாள், பசியுற்று வருந்திய ஒருவர் பட்டினத்துப்பிள்ளையாரைக் கண்டு உணவு வேண்டி நிற்க, அவர் பத்திரகிரியாரைக் காட்டி, 'அந்தச் சமுசாரி யிடம் செல்க' என்றார். அது கேட்டதும், பத்திர கிரியார், தம்பால் இருந்த ஓட்டையெடுத்து, 'இதுவும் இந்த நாயுமன்றோ என்னைச் சமுசாரியாக்கின' என்று வருந்தி நாய்மேல் எறிந்தார். அது நாயின் மண்டையில் படவே நாய் இறந்து போயிற்று. சின்னாட்குப் பின் பத் திரகிரியும் இறைவன் திருவடியடைந்தார்.

முடிவில், பட்டினத்து அடிகள் திருவொற்றியூர்க்குச் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். ஒரு நாள், கடற் கரையில் உள்ள நீர்நிலையில் ஆடையொலிக்கும் ஏகாலிச்

சிறுவர் விளையாடுவது கண்டார். அவரோடு தாமும் விளை யாடலுற்று, அவர்கள் தம்மை ஓரிடத்தில் புதைத்தால் தாம் வேறோரிடத்தில் தோன்றிக் காட்சியளித்து இன் புறுத்தினர். இவ் வகையில் அவர்கள் தம்மை ஆழத்தில் புதைக்குமாறு செய்து, இறுதியில் அவர் காட்சி வழங் காது சிவலிங்கமாக மாறினர் என்பர்.

பிள்ளையார் சீகாழியில் தங்கியபோது திருக்கழுமல மும்மணிக்கோவையும், காஞ்சி மாநகரில் திருவேகம்ப முடையார் திருவந்தாதியும், திருவொற்றியூரில் திருவொற்றி யூர் ஒருபாவொருபஃதும், தில்லையில் கோயில் நான்மணி மாலையும் பாடியருளினர்.

பிற்காலத்தே சுமார் இருநூறு இருநூற்றைம்பது ஆண்டு கட்கு முன்பு தோன்றிய துறவியொருவர் பட்டினத்துப் பிள்ளை யென்ற பெயரால் நிலவினர். அவரும் சில பாட் டுக்களைப் பாடினர். பிற்காலத்தார் அவரையும் திருவெண் காடரான பட்டினத்துப்பிள்ளையென்றே கொண்டு அவர் பாடல்களையும் பிள்ளையார் பாடலாகக் கருதிப் பேசலாயினர். உண்மை யாராய்ச்சி, இருவரையும் வேறுக்கி, இருவர் பாடல் களையும் வேறுபடுத்திக் காட்டிவிட்டது.

சிவனை வழிபடும் சைவர்களுக்கு வேதம், சிவாகமம், புராணம் முதலியன சமய நூல்களாகும். வேத நான்கும் இறைவன் திறமே மொழியும்; மொழியுங்கால் அவன் பெரிய திற் பெரியன் என்றும் சிறியதிற் சிறியன் என்றும் மொழி யும்; (கோயில் 12). சிவாகமங்களுக்குச் சித்தாந்த மென்ப தும் பெயராகலின் அவற்றைச் சைவசித்தாந்த மென்றும், அவற்றை இறைவனே உபதேசித் தருளினன் என்றும் சைவர் கூறுவர்; இக் கருத்தையே பட்டினத்துப்பிள்ளை யாரும், 'கைவல நெல்லியங் கனியது போலச், சைவ சித் தாந்த தெய்வ ஆகமத்தை, வான்முறை பகர்ந்த திருமலர் வாய' (கழுமல, 13) என்றும், வேதம், மந்திரம், வேள்வி, இசை முதலியவற்றையும், ஞானசிவாகம வகைக் கலைகளையும் ஒழுக்க நெறிகளையும், பத்தி நெறியினையும் விளக்குவன (கழுமல. 22) என்றும் கூறினர்.

(தொடரும்.)

திருக்குறள்
பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Ph. D.

(முற்றொடர்ச்சி: துணர் உடு, மலர் ய௨, பக்கம் 342.)

வெகுளாமை.

வெகுளாமை யாவது துறவை மேற்கொண்டு நின்று சிவோகம் பாவனை யென்னுஞ் சாதனத்தைச் செய்வானுவான் தன் மாட்டுக் காணும் இன்னுதனபற்றி ஓரோ வொருகால் பரிசயத்தானே தோன்றற் பாலதாய சினத்தைச் சாத்தியந் தலைப்படுதற் பொருட்டு ஒழிதல்.

முன் தவஞ் செய்வான்மாட்டு மன மொழி மெய்களுள் மொழிபற்றிச் சிறப்புவகையான் நிகழுங் கூடாவொழுக்க விசேடமாகிய பொய்ம்மையைக் கடியு முபாயங் கூறுமுகத்தானே வாய்மை யென்னுஞ் சாதனத்தைத் தந்தவர் ஈண்டு மனம் பற்றிச் சிறப்பு வகையா னெழுந்து மன மொழிகள் பற்றிப் புலப்பட்டுப் பாவம் பயந்து நிற்குங் கூடாவொழுக்க விசேடமாகிய வெகுளியை நீக்கும் வழி தருவாராய் வெகுளாமையை எடுத்துக் கொண்டாராதலின், இது வாய்மையின் பின் வைக்கப்பட்டது.

1. *மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய*
   பிறத்த லதனுன் வரும்.

இ-ள். வெகுளியை மறத்தல் — தவஞ் செய்வானுவான் வெகுளிக் காரணத்தை மறப்பானுக; பிறத்தலதனுன் யார்மாட்டும் தீய வரும்—அக்காரணந் தோற்றுதலால் தவஞ்செய்வார் செய்யாதாராகிய யாவர்மாட்டுந் தீயனவாகிய பாவங்கள் மிகும் ஆகலான். எ-று.

மறத்தல் என்பது உடம்பாட்டுப் பொருளில் வந்த அல்லீற்று வியங்கோள். வெகுளி காரிய வாகுபெயர். யாவர் என்பது யாரென இடைக்குறைந்து நின்றது. மாட்டு ஏழனுருபு. உம்மை முற்றும்மை. தீய வென்பது அன் என்னுஞ் சாரியை பெருத குறிப்பு வினையாலணையும் பெயர். ஈண்டு அது தீய சிந்தைகளானும், தீய மொழிகளாகிய சாபங்களானும் வரும் பாவங்களைக் குறித்து நின்றது. பிறத்தல் என்பது அது வென்னும் பகுதிப் பொருள் விகுதி யேற்று, பிறத்தலது வென நின்று, அதன்மேல் மூன்றனுரு பேற்றுப் பிறத்தலதனுன் என ஆயிற்றென்க. அல்லதூஉம், அதன் பிறத்தலான் என விகுதி பிரித்துக் கூட்டி முன் பின்னுக மொழி மாற்றிக் கூறினு மமையு மென்க. ஆன் உருபு காரக வேதுப் பொருளது. வரும் என்பது மிகும் என்னும் பொருளில் நின்றது. அதனை 'அணி வரு பூஞ்சிலம்பு' என்பதனுனு மறிக.

'முன்னை அதிகாரத்து ஈற்றுக் குறளாற் றவஞ் செய்வானுக்குப் பொய்யாமையானது மன மாசை நீக்கி ஆன்மப் பிரகாசத்தை உண்டாக்குவதிற் பிறவறங்களினுங்கு சிறந்த தென்றீர். அப்பொய்யாமை துணைகொண்டு தவஞ் செய்தற்கண் பிறர் செய்யும் இன்னுதனபற்றி இடையிடையே வெகுளி தோன்றுகின்றதே; இவ்வெகுளியானது சாத்தியங் தலைப்படுதலை எவ்வனந் தடுக்கு மென்றும் அதனை எவ்வாறு நீக்கலா மென்றும் அறிய விழைகின்றேன்.' என்ருற்கு உத்தரம் இக்குறளாற் கூறுகின்ருர்.

பிறர் தன்னுடம்பிற்கு ஊறு செய்தா ரெனத், தன்னினத்திற்குக் கேடு சூழ்ந்தா ரெனத், தன்னைப் பொய் முதலாயின சொல்லி அலைத்தா ரெனத், தன்புகழ் கொன்றுரைத்தா ரென ஒருவன் அறியின், அறிந்த அக்கணமே அன்னுர்மாட்டு அவர் செய்த இன்னுச் செய்கைகள்பற்றி அவனுக்கு வெகுளி தோன்றுதல் கூடும். இவ்வெகுளி

யானது அதனை யுடையானை மயக்கி வருவதொன்ருகலான், ஏனைப் பொய் களவு முதலாயின போலன்றித் தோன்றுங் கால் அடக்கு மியல்பிற்றன்று என்பதுபற்றி அதனை ஒழித் தற்கு உபாயங் கூறுவாராய்த் தவஞ் செய்வானுவான் வெகுளிக் காரணங்களாகிய உறுப்பறை, குடிகோள், அலை கொலைகளாகிய இவற்றை மறப்பானுக வென்ருர். இவற்றை மறந்தானுயின் வெகுளி யருகும். அது அருகி நின்ருனுக்குத் தவங் கடை போகும் என்றபடி.

இனி, வெகுண்டானது மனமானது அவனுக்கு ஊறு முதலாயின செய்தார்க்கு இன்ன செய்தற்கண்ணும் அவரைக் கொல்லுதற் கண்ணுஞ் சிந்தைகளை உளவாக்கி நிற்கும். இச் சிந்தைகள் தவஞ் செய்யாதானுக்காயின் மனமொழி மெய்கள் பற்றிப் பாவம் பயந்து நிற்கும். தவஞ் செய்வானுக்காயின் மனமொழிகள் பற்றியே வெளிப் படும். ஆயினும், இத் தவஞ்செய்வான் மனம் தூய்தா தல்பற்றி அது அசைய, அவ்வசைவு இன்ன செய்தார் மாட்டுப் பட்டு அவர்க்குப் பெருந் தீங்கு விளைத்து நின்று அவனுக்குப் பாவத்தை யீனும். அல்லதாஉம் அவன் இச்சிந்தைகளான் ஏவப்பட்டுத் தனக்கு இன்ன செய்தார்க்குச் சாபஞ் செய்து அதனுனே பாவத்தை மிகுவிப்பன் என்றவாறு.

தவஞ் செய்வானுக்குப் பரிசயத்தாலாயினும் வெகுளி பலகாற் ருேன்றின், அவனுக்குப் பாவம் பெருகிச் சாத்தியந் தலைப்படுதலைத் தடுக்குமென்று கூறியவாரு யிற்று. அன்றி, அருகித் தோன்றின், அதனுல் வரும் பாவம் அப்பிறப்பிலேயே உடலூழாய் ஒழிந்து போகு மே யொழிய அவன் தவம் முடிவுபோதற்குத் தடை யாகா தென்பது அறிக.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'யாவர்மாட்டும் வெகுளியை யொழிக. ஒருவர்க்குத் தீயன வெல்லா

முளவாதல் அதனுன் வரும் ஆகலான்' என்னும் உரையைத் தந்தாரெனின், அஃது ஆசிரியர்க்குக் கருத்தன்றென்க. எதனுலெனின், தீயனவெல்லா முளவாகும் என்பது படவாதல், தீயன வெல்லாம் வரும் என்பது படவாதல் கூறுவ தொழிந்து, தீயன வெல்லாம் உளவாதல் வருமென்பது படக் கூறுதற்கண், ஆசிரியர் சீர் நிரப்பும் பொருட்டே ஒருசொல் மிகைபடக் கோத்தவராவ ரென்னு மதனுனே யென்க. இன்னும் மறத்தல் என்பதற்கு நேர் பொருள் சிறந்து நிற்ப, அதனை நோக்காது இலக்கணையாற் சிறப்பில் பொருள் கண்ட குற்றமும் அழகியார்மாட்டுப் படுதல் காண்க.

இப்பாட்டு என் னுதலிற்ருே வெனின், தவஞ் செய்வானுவான் தன் சாத்தியங் தலைப்படல் விழையின் அவனுக்குப் பாவ சிந்தைகளை மிகுவிக்கும் வெகுளியாகாது ஆகலான் அன்னுன் வெகுளிக் காரணங்களை மறந்து அதனுனே வெகுளியை யொழிவானுக. எ-து.

2. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக் காக்கிலென் காவாக்கா லென்.

இ-ள். சினம் செல்லிடத்துக் காப்பான் காப்பான்—தன் சினம் பலிக்குமிடத்து அதனை யெழாமற் றடுப்பவனே சிறப்புடைத் தடுப்பவனுவான்; அல்லிடத்துக் காக்கில் ஏன் காவாக்கால் என்—அன்றி ஒருவன் அதனைப் பலிக்குமிடத்துத் தடாது பலியாத விடத்துத் தடுத்தாலென், தடாதொழிந்தாலென். ஆகலான் தவஞ் செய்வானுவான் பலிக்குமிடத்து மறத்தல் வெகுளியை. எ-று.

செல்லிடம் வினைத்தொகை. அது ஈண்டு மனவாற்றலிற் குறைந்த மக்களையும் விலங்குகளையுங் குறித்து நின்றது. அல்லிடம் என்பது அஃதல்லாததாகிய இடம் என்னும் விரிப் பொருளை யுணர்த்தி நிற்கும் இருபெய

ரொட்டுப் பண்புத்தொகை. அஃது ஈண்டு மனவாற்ற லில் மேம்பட்ட மக்களாகிய சீவன்முத்தர்களைக் குறித்து நின்றது. காப்பான் என்பது இரண்டிடத்தும் வினைப் பெயர். முன்னது எழுவாயாயும் பின்னது சிறப்புத் தோன்ற நின்ற பயனிலையாயும் நிற்றல் காண்க. 'செல்லிடத்துக் காப்பான் சினங் காப்பான்' என்பதனை 'அம்மகனே மகன்' என்புழி 'அம்மகனே சிறப் புடை மகனவன்' என்னும் பொருள்படுமாறு போலக் கொள்க.

'வெகுளியானது பாவங்களை மிகுவிக்குமென்பது பற்றி, அதன் காரணங்களை மறந்து அதனை யொழியு மாறு கூறினீர். அவற்றை மறத்தல் எளிதன்று. என் னினும் மனவலியான் மேம்பட்டாராகிய சீவன்முத்த ரான் வரும் ஏதமே பெரிதாகுமாகலான், அவர் செய் யும் இன்னாதனபற்றி என்மாட்டு எழும் வெகுளியை முதற்கண் நீர் கூறியவாறு ஒழிகின்றேன்' என்று ஒரு வன் கூறினனாயின், 'அற்றன்று. அவரான் ஒரு தீங்கு முண்டாகாது. நின்னினும் மனவலி குறைந்தார் செய்யு மின்னாதன பற்றி நின்மாட்டெழும் வெகுளியே பெரும் பாவம் பயக்குமாகையான் முதற்கண் அவ்வின்னாதன வற்றை மறந்து அவர் மாட்டெழும் வெகுளியை யொ ழிக' என்று இக்குறளாற் கூறுகின்றார்.

தவஞ் செய்வானவான் மனத்தாற்றாயனகையான், மனவாற்றல் படைத்துளனவன். தனக்கு இன்னாதன செய்தார் மனவலி குறைந்தவராயின், அன்னார் கெடுக வென்றுதல், இறக்க வென்றுதல் அவன் நினைப்பினுஞ் சபிப்பினும், கேடு மிறப்பும் அந் நினைந்த துணையானும் அச் சபித்த துணையானும் அவரைச் சென்று பற்றும். அல்லதூஉம், அவனது மனவாற்றலாலாயினும் மொழி யாற்றலாலாயினும் அன்னாருடைய பகைவன் ஒருவன் தூண்டல் பெற்று அவருடைய பொருளையேனும் உயிரை

யேனும் பிரித்துநின்று அவருக்குத் துன்பம் விளைப்பன். இவற்றானே தவஞ்செய்வானுவான் தன் தவத்தாற் றலைப் பட்ட மன மொழி யாற்றல்கள் காரணமாகத் தனக்கு இன்னா செய்தாருள் மனவலி குறைந்தாரைத் துன்பத்துட் படுத்தும் பெற்றி வாய்ந்தவ னென்பது புலனும். இப் பெற்றிதானும் அன்னார் செய்த இன்னாதனவற்றை நினைப் புழித் தோன்றும் வெகுளிபற்றித் தொழிற்படும். அது தொழிற்படற்கேதுவாய வெகுளியானது வெகுண்டானது மனத்தைக் கலக்கி யெழுவதொன் றாகலான், அஃது அவனுக்குந் தீங்கு பயக்கும் பாவச் செயலாகும். ஆகலான் செல்லிடத்துச் சினத்தைக் காவாதானுவான் மனவலி குறைந்தார்க்குத் தீங்கு விளைத்தலான் வரும் ஒரு வகைப் பாவத்திற்கும், தன் மனத்தைக் கலக்கித் தனக்குத் தீங்கு புரியும் ஒரு வகைப் பாவத்திற்குமாக இருவகைப் பாவத் திற்கும் ஆளாவன். இனிச் செல்லிடத்துச் சினத்தைக் காப்பானுவான் மனவலி குறைந்தார்க்குத் தீங்கு பயக்கு மொன்றனைச் செய்யாது விடுதலான் வரும் ஒருவகை யறத்திற்கும், தனக்குத் தீங்கு இழைக்கு மொன்றனைச் செய்யா தொழிதலான் வரும் ஒருவகை யறத்திற்குமாக இருவகை யறத்திற்கும் உரிமை பூண்டு நிற்பன். இனி, மனவலி குறைந்தாரே உலகத்துப் பலராகலான் அன்னார் செய்யும் இன்னாதனவும் பலவாத லமையும். ஆகையான் செல்லிடத்துக் காவாதானுக்கு வெகுளிதோன்றும் அமயங் களும் காப்பானுக்கு வெகுளாமை கூடும் அமயங்களும் பலவாகும். ஆக, முன்னவன் இருவகைப் பாவத்தினையும் பின்னவன் இருவகை அறத்தினையும் மேன்மேலுஞ் செய்ய அவர்கள் முறையே பாவத்தினுள்ளும் அறத்தினுள்ளுந் தேங்கி நிற்பர். ஈண்டு செல்லிடத்துச் சினத்தைக் காப் பானுக்கு அதனைப் பலகாலுங் காத்தலினால் வரும் இரு வகை யறங்களும் வளர்ந்து அவனது தவத்தை முடிவு போக்குதற்கு ஏதுவாகு மாகலான் அவனே சிறப்புடைக் காப்பான் என்பது தோன்ற செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் என்றா ரென்க.

இனி, மனவலியான் மேம்பட்டாராகிய சீவன்முத்த ராவார் பிறர்க்குச் செய்யும் இன்னுதன மிகச் சிலவாகும். அவர் செய்யு மின்னுதனபற்றிச் செல்லிடத்துக் காவா தானுக்கு வெகுளி தோன்றும் அமயங்களும் மிகச் சில வாகும். அவ்வமயங்களில் அவன் தன் வெகுளியான் அவருக்குத் தீங்கு விளைக்கும் ஆற்றல் இல்லானுகையான், அவர்மாட்டு வெகுளா தொழிவானுயின் தனக்குத் தன் மனத்தைக் கலக்குதலான் வருந் தீங்கு ஒன்றனைச் செய் யாது விடுதலான் வரும் ஒருவகை யறத்தையே அச்சில வமயங்களிற் செய்து நிற்பன். அன்றி, வெகுளுவானுயின், தனக்கே தன் மனத்தைக் கலக்குதலாகிய தீங்கு பயக்கும் ஒருவகைப் பாவத்தையே அச் சில வமயங்களிற் செய்தவ னுவன். கடலிடையுள்ள நீரைச் சில கைந்நீரைப் பெய்த லானும் முகத்தலானும் முறையே பெருக்கவாதல் குறைக்க வாதல் முடியாதவாறு போலத் தன் சினஞ் செல்லிடத்துக் காவாது இருவகைப் பாவத்தையும் மறுத்தும் மறுத்துஞ் செய்து அவற்றிடைத் தேங்கி நிற்கு மவனுக்குச் சிலவாகிய வமயங்களில் சீவன்முத்தர் மாட்டுத் தன் சினத்தைக் காத்தலினுல் வரும் அறத்தானுதல் காவாததனுல் வரும் பாவத்தானுதல் தன் தவத்தைப் பெருக்கவாதல் குறைக்க வாதல் முடியாதென்பதை அறிவுறுத்துவாராய்ச் செல் லிடத்துச் சினத்தைக் காவாது ஒருவன் ‘அல்லிடத்துக் காக்கிலென் காவாக்கா லென்’ என்றுரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், ‘தன் சினம் பலிக்கு மிடத்து அதனை யெழாமற் றடுப்பானே அருளாற் றடுப் பானுவான்; ஏனைப் பலியாத விடத்து அதனைத் தடுத்தா லென், தடாதொழிந்தாலென்’ என்னும் உரையையும், ‘செல்லிடம் அல்லிடம் என்றது தவத்தாற் றன்னின் மெலி யாரையும் வலியாரையும். வலியார்மேற் காவா வழியும் அதனுன் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையிற் காத்த வழியும் அறனில்லை யென்பார் காக்கிலென் காவாக்காலென்

என்றார். இதனுன் வெகுளாமைக் கிடங் கூறப்பட்டது' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

வலியார்மேற் றன் சினத்தைக் காவாவழி அதனுன் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையின் காத்தவழி அவனுக்கு ஒருவகை அறமின்றாயினும், அவர்மேற் காவாவழி அதனுன் அவனுக்கு வருவதோர் தீங்குண்மையின் காத்த வழி அவனுக்கு வேறொரு வகை அறமுண்டாதலான் அழகியாருரை உரையன்மை யறிக.

இப்பாட்டு என்னுதலிற்றோ வெனின், தவஞ் செய்வானுக்குத் தன்சினம் பலிக்குமிடத்து அதனைச் செய்யாமையே சாத்தியந் தலைப்படுதற்குச் சிறந்த ஏதுவாகும். ஆகலான் அன்னுன் அவ்விடத்து வெகுளிக் காரணங்களை மறந்து அதனுனே வெகுளியை யொழிவானுக எ-து.

(தொடரும்.)

துறவும் தவவுருவும்

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் உ௫, மலர் ௰௧, பக்கம் 352)

சிந்திக்கின், பற்றற்றான் பற்றினைப் பற்றுதல் தூநெறியாகிய மெய்த்துறவுக்கும் மெய்யுணர்தற்கும் இன்றியமையாதது. துவரத்துறத்தற்குப் பற்றறுக்கும் பற்றே சிறந்தமைந்த நிலைக்களனென்பது,

> 'பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
> பற்றை யறுப்பசென் றுந்தீபற
> பாவிக்க வாராரென் றுந்தீபற'

எனத் திருவுந்தியாரும்,

> 'பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
> பற்றைப் பரிந்தறிந்து பார்க்கின்ற—பற்றதனைப்
> பற்றுவிடி னந்நிலையே தானே பரமாகு
> மற்றமிது சொன்னே னறி'

எனத் திருக்களிற்றுப் படியாரும், வள்ளுவர் கூறப் புகுந்த பொருளைத் தெளித் துரைத்த நயம், குறட்கருத்தோ டொப்ப நோக்கி இன்புறத்தக்கது. எனவே, பரம்பொருளை நாடும் பொருட்டு அனைத்தையும் பொருட்படுத்தாது எல்லாவற்றோடுங் கூடியிருந்தும் அவற்றோடு தாக்கற்று நின்று, அனைத்தினும் விடுபட்ட நிலையே மெய்த் துறவின் உள்ளக்கிடக்கை. இவ்வாறு மனதைப் பரம்பொருளில் நிலைக்கச்செய்யும் முயற்சியில் ஈடுபடுவதின் பயனாக, உள்ளம் அமைதியுறும். உள்ளத்து அமைதி நிலை, ஆற்றலுடைய சூழல்களையும் அடக்கியாளும் வலியுடைத்து. மற்றும் உறுதியாக நிலைத்துநிற்கும் அமைதியின் ஆற்றல் சூறாவளியின் ஆற்றலைத் தகர்க்கும் தகைமையுடைத்து. அமைதியின் ஆற்றலுக்கு இன்பமே இயல்பாதலின், அதனை நிகழ்த்துங் காலை, உள்ளத்தில் உண்மையழகு மலர்ந்து இறையொளி ஒளிரும், இத்தகைய தெய்வ ஒளியை நாடுவது துறவின் முற்றிய நிலையாகும்.

பற்றின்றி வாழும் மனத் துறவு பேராற்றல் வடிவுடையது. மற்றும் தளரா உறுதியும் கொண்டது. இத்தகைய உள்ளத் துறவில் மெய்க்காட்சி எளிதாம். பற்றற்றவரையும் ஓரோ வழி அவா வஞ்சிக்குமாதலான், உள்ளங்கவர்ந்து மேலெழும் இயல் புடைய ஆசையினை அடக்கித் தடுத்தாளும் ஆற்றல் அன்னார்க்கு இன்றியமையாதது. இத்தகைய அவா, துன்பம் தருதலோ டமையாது, துறவியற்குச் செயிருடம்புடன் செல்லாத்தீ வாழ்க்கையையும், பிறப்பையும் உடன் தருதலான், துறவு பூண்டார் அதனை அஞ்சுவதே அறம். துறவுநெறி நின்றார்க்கு அழுக்கறுத்தலாவது அவாவின்மை யாதலால், அவா வறுத்தற் குற்ற கருவி வாய்மை வழுவா தொழுகல். மனத்தொடு வாய்மை மொழிய, அவாவின்மை வருதலான், துறவு நிலையே, உண்மையைக் காட்டும் அறிகுறியாகும். எனவே, துறவு மேற் கொண்டார் விரும்பற்பாலது அவாவின்மை யாதலால், மெய் யுணர்ந்து அவாவினை அற அறுத்தற்கு, நீக்கமில் உறுதியும், இடுக்கண் அடுக்கிவரினும் சிறிதும் தளராத ஊக்கமும், இடுக்கண் வருங்கால் அதனை நகும் இயல்பும், உன்னித் துணிந்த செய்வினையினை இனிது முடிக்கும் அயரா உழைப்பும், பற்றற்ற மனப்பான்மையும், துணிவரு வுளனும், பணிவிலா வுரனும் துறவியர்க்கு இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. இங்ஙனம் வழுவாமை நிற்றலே துறவின் வழியிற் சார்ந்து நிற்றலாம். துறவா யவாவறுத்து மெய்யுணர்ந்த தூயோர், பிறர் கறுத் தின்னா செய்தவக் கண்ணும் திறலுடையராய் வயங்கி மறுத் தின்னா செய்யாத மாசற்றோராய் அருளொடு கூடிய அற வொழுக்கத்தில் திகழ்வது அன்னவ ரியல்பு.

புறப் பற்றுக்களையும் அறவே யொழித்து, உள்ளத்தை புலன்வழிச் செல்லா தடக்கும் மனநிலையும், தன்னுயிர்க்கு உறும் துயரினைத் தனி நின்று பொறுத்து பிறவுயிர்களைப் பேணும் மனநலனும் நிலை பெறற்கு நீண்ட தவம் இன்றியமையாது வேண்டப்படும். உறுதிபயக்கும் செந்நெறிபால் படர்ந்து அறமாற்றி மனநிறையுடன் வாழ்தல் தவமாகும். இத் தவமும், முன் தவம் செய்து பழகினார்க்கே இனிதாகக் கைகூடும் அருமை யுடைத்தாயினும், அது தீவிர வன்மத்தால் உரம் பெறும். தன்னுயிர்க்கு வரும் துயரைப் பொறுத்தலும், பிற வுயிர்க்குத்

துயரைச் செய்யாமையும், தன்னய மின்மையும், வேட்கையடக்கலும் பிறர் துன்பம் துடைத்து அருள்புரிந்து ஒழுகுதலுமே ஒருவருக்குரிய தவமாம். இதுவே தவத்தின் உருவென்பது.

'உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு'

என்ற ஓரடி முக்காலால் வலியுறுதல் காண்க. தவவுரு சிறக்க, மனமொழி மெய் தழுவி யொழுகுதற்கேற்ற அடிப்படை நெறிகள் ஆற்றல் மேவி இயங்கவேண்டும். காமம் வெகுளி மயக்கமற, மனத்தெளிவுடன் அடங்கும் நிலையே மனத்திற்குரிய தவமெனப்படும். வாய்மை நலன் கொண்டு இறைவேட்கையைத் தூண்டும் ஞானக்கலைப் பயிற்சி, மொழியான் செய்யும் தவமாகும். மெய்யாற் செய்யும் தவம் புலனடக்கமும் நோவுறுத்தாமையு மாகும். மன மொழி மெய்களான் திகழும் முத்தவங்கள் பெறற்கரியதோர் மெய்ம்மை தேற்றும் நுட்பமுடைமையான், அந் நெறி நின்றார்க்கு அவைகள் பேரறிவுறுப்பாகும்.

எத்துணைப் பெரும் பேறு பெறினும், அருந்தவ ரியல்பு ஆருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாது அருள்புரிவதனை மேற்கொள்வதாகும். மனந் தூய்மையுடைய தவ மெய்யரது துணிவு, பிறர்க் கின்னா செய்யாமையோ டமையாது, செற்றம் பற்றி இன்னா முன் செய்தார்க்கும் செய்யாமையே யாகும். பிறிதோருயிர்க்கு இன்னல் இழைத்தலைத் தவிராவிடத்துத் துறவின் வழித்தாய் வரும் ஞானத்தாற் பயனின்று. அன்னார் தவமிழந்து பழியும் பாவமு மெய்தி உய்யா விழுமமு மடைவர். எனவே, தவஞ் செய்வார் இன்னா செய்தார்க்கு இனியவே செய்து அவர் தமக்கு உறத்தக்க இன்னல்களைத் தவநெறியால் உறாமற் காத்து, அதுபற்றி அவரை ஒறுக்கும் கருத்தையும் ஒருங்கே தம் நெஞ்சகத்தினின்றும் விட்டொழிவர். துன்பஞ் செய்தாரை ஒறுத்தலாவது அவர் தாமே நாணும்வகை இன்பஞ்செய்த லென்பதூஉம், புறத்தானன்றி அகத்தானும் இன்பமே செய்யின் இன்னா செய்தார் நாணுவராதலின் அந் நாணமே அன்னவருக்கு ஒறுத்தலாயிற்றென்பதூஉம்

'இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்ற வள்ளுவரது செழுமையான வாய்மொழியானு முணரப்

படும். இதனுன் வன்கண்மை வாய்ந்த எண்ணங்களை வலியறச் செய்யும் வழி காணப்படும். இத்தகைய மனப்பாங்கு செவ்விய மனத்திண்மையானும் செயலாலும் சொல்லாலும், பிழைத் தாரைப் பொறுக்கும் ஆற்றலானும் உண்டாகற்பாலது. சிந்தை சொற் செயல்களால் பிறிதோருயிர்க்கு இன்னு செய்யாமையினை வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்தாம், தம் எண்ணங்களையும் மனவெழுச்சிகளையும் தூய்மையாகக் கொண்டு, காய்தல், உவத் தல் கடந்து தியாகத் திறமையினுன் தம் கடனுற்ற இயலும். இத்தகைய மனப்பான்மையினைத் தவமுயல்வார் பருமையுறவும் நுண்மையுறவும் கைக்கொண் டொழுகற்பாலர். இங்ஙனம் பிறர் நலங்களை ஊறுபடுத்த லிலாது வாய்மை வழுவாமையுடன் வாழ்பவர், பிறர் தன்னைத் தமது தந்நலத்திற்கு வாய்ந்த ஒரு கருவியாக ஏற்றுக்கொள்ளும் வகையில் நடந்து கொள்ளுதலும் தகாது. மற்றும், அன்னவர் கடைப்பிடிக்க வேண்டிய சீரிய கொள்கையை இரக்கங் காட்டுமுகத்தான் கைநழுவவிட்டு இளகிய மனப்பான்மை கொண்டு எல்லை கடந்து ஒழுகுதலும் அறவே ஒதுக்கப்படுதல் வேண்டும். இதுவே மாட்சிமையிற் குற்றமற்றுரது கோட்பாடு. வாய்மை வழுவா வழி இத் தூய கொள்கை பயன்படுமா தலில்லை பற்றி, வாய்மை வரையிலக்கணம் கூறப் புகுந்த வள்ளுவர், வாய்மையின் தன்மை நிகழ்ந்தது கூறல்மட்டு மன்று அது தானும் இன்னு பயவாதாயின் மெய்ம் மையாம், பயப்பிற் பொய்ம்மையாம் என,

> 'வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
> தீமை யிலாத சொலல்'

என்ற குறட்பாவில் வகுத்து விளங்க வைத்த ஒண்மை ஊன்றி யுணரற்பாற்று. வாய்மையா லகந்தூய்மையுடைய தவவாழ் வினர் புலனின்பத்தை விட்டு உள்ளின்பத்தை நாடுவதில் வீறுற்றுத் துகளறு சிந்தையராய் எவ்வுயிரிடத்தும் பொது வுறவு பூண்பதால், தம் துன்பம் பொறுக்கும் ஆற்றல் தவவுணர் வுடையார்க்கு இயல்பாக உண்டாகிறது. உயிர்க்கு உறுகண் செய்யாமை, இத்தகைய ஆற்றலைப் பெருக்குமாதலான், தவத்தின் உண்மை யழகும் உருவமும் தனிப்பெருங்கருணையில் எழுந்த அருளறிவின்ப முதிர்வால் விளையுமென்பது அறியப்பட லாயிற்று. எனவே, ஆருயிர்கள்பால் பேரன்பை வளர்க்கும் தவ வியல்புடையார்க் கெல்லாம் இறைவன் மெய்யான தவ வடிவா யிருப்பவ னுதலான், அன்னுரை வணங்குதல் உடலிற்குரிய தவமென்க.

தவ வினையால் ஆகாதது ஒன்றுமில்லை யாதலான், தவத் தைத் தாழாது செய்யின் விரும்பிய பயன்களை விரும்பியபடியே

எய்தலாம். செவ்விய தவமே எவ்வகைப் பொருள்களேயும் ஈயவல்லது. மற்றும், எண்ணுரைத் தாழ்த்தவும், அடுத்தவரை உயர்த்தவும் தவம் வல்லது. தவத்தினது ஊற்றம் உயிர்க்கு ஒளியும் இன்பமும் பயந்து அவ்வுயிரையும் பற்றி நிலையாய வீட்டின்பத்தில் புகுத்துமாதலின், தவத்தினை நாடார் பிறவி வலேயுட்பட் டுழன்று தாமே கெடுவரென்பது புலப்படும். அருளுதல் சான்ற அருந்தவம் செய்யின், அறிவு மிகும். பொன்னைத் தீயிடைப் பெய்தக்கால், அப்பொன்னுக் குரிய ஒளி மிகுமாதல் போன்று, தவக்கனலில் உயிரைப்பற்றிய அறியாமை யும் ஆணவமும் புறப்பொரு ளுணர்வும் அகப் பொருளுணர்வும் அவியவும், உயிர் தூய்மையுற்று இறைவனதுணர்வில் தன்னியல் முதல் கெடாது அறிவு ஒளியான் மிகுந்தொளிரும். இவ்வாறு துன்பங்களைப் பொறுத்துச் சுடச்சுட நோற்கும் அருந்தவர்க்கு மெய்யுணர்வு மேவியக்காலே, அன்னவர் உயிர் பெற்ற பயனை யுற்றவராவர். ஊனுடம்பு பெற்ருர் உயிரைப் பெற்ருரெனினும், அவ்வுயிரின் உயர்நிலையைத் தனக்கே உரித்தாகக் கொள்வர் இறைவனே டொன்றுதற் குரியார். மற்றும், தவவினையுடையார் தாமாற்றும் நோன்பினுல் தப்பரும் விதியினையும் மாற்றுவர். விதியின் இரும்பன்ன நெஞ்சையும கலக்கும் ஆற்றலுடையவ ராவர். இவ்வாறு தவத்தான் ஒடுங்கி நிலைபெற்ருர், தம் முள்ள மலர்மிசையில் விளங்கும் இறைவனைப்பற்றி என்றும் நிற்ப ராதலின், அன்னவர் உள்ளம் நடுங்குதலில்லாமற் போகவே, நமனு மங்கில்லை யென்பர், தமிழ் மறை மொழி தந்த தண்ணளி யாளர். எனவே, மெய்த் தவ சித்தியுடையார் காலனையும் புறங்கண்டு பெருந் திருவினையும் பேராத இயல் நிலையையும் அடைவரென்பது பெறப்படும்.

தவத்தின் உயிர் நாடி துறவாதலின், துறவு புறத்துள்ள ஒரு கோல மன்று. அது மனத்தின் நிலைமையினைப் பற்றியது. போலித் துறவு தவத்தின் தற்கொலை யாகும். தவத் தோற்றம் மேற்கொள்வது தவ நெறியில் உரம் பெற்று மெய் யுணர்வுற்று வீடுபெறற்கு. நெஞ்சம் தானறியக் குற்றப்படின், தவ நெறி மாசுறும். எனவே, நெஞ்சத் துறவிலாது புறத்தே தவத் தோற்றம் கொள்வார் படிற் ருெழுக்கம் பழியுடன் இழிவினை யும் வழுவாமல் பயக்கும். பற்றற்ருர் போலத் தோன்றும் வஞ்ச மனத் துறவினரைப் பற்றுதல்,

> குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
> குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
> குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
> குருடுங் குருடுங் குழிவிழு மாறே

என்றவாருய் முடியும். மற்றும் தவ வேடம் புனைந்து உள்ளத்தே

உலகப் பற்று தேயாதிருப்பவரின் புன்மை நிலையினை,

'உடலிற் றுவக்கிய வேட முயிர்க்காகா
உடல்கழன்றால் வேட முடனே கழலும்
உடலு யிருண்மை யென்றோர்ந்து கொள்ளாதார்
கடலி லகப்பட்ட கட்டை யொத்தாரே'

என்ற திருமந்திரத் திருவாக்கான் உணரப்படும்.

வஞ்சத் துறவுடையாரது வல்லுருவ மதையும், அன்னார் அல்லவை செய்தலையும், வள்ளுவர்

**வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.**

**தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.**

என்ற வெண்குறட் பாக்களின் மூலம் உவமை காட்டிக்கடிந்தது கருத்திற் பதிக்கற் பால தாகும். எனவே, வேடநெறி நில்லார், வேடம் பூணுங்காலை, தீவினை அவர்பாற் சென்று சூழ்ந்து நிற்கு மென்பது அறியப்படும். இவ்வாறு உலகறியப் பிழையாது மறைந் தொழுகி நெஞ்சிற் றுறவார், முற்றத் துறந்தார் போல் புறத் தோற்றம் பொருந்தித் தமது வன்கண்மையா லெழுந்த ஒழுக்கப் பிழைப்பால் உலகை வஞ்சிக்கும் இயல்பிற்கு, பிறிண்டும் பண்புவமை பொருத்தமுறக் கூறுமுகத்தான், வள்ளுவர்,

'புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து'

என ஐயுறவின்றி விளங்க வைத்த அருமை எத்துணை மாட்சித்து! இக் குறள்பால் செம்மை, கருமை என்பன, பொருளின்கண் உள்ளப் பண்பிலும், உவமையின் கண் நிறப் பண்பிலும் சேர்ந் திருக்கும் தன்மை இவண் கருதற் பாற்று. தவத் தோற்றத்திற் குரிய புற குறியீடுகளற்ற தவத்தினாலே, உண்மை நிலை உணரப் படமாட்டாது. தவநிலைக்கண் உறையும் திருவுள்ளச் செம்மையினைப் புறத்தே வெளிப்படுத்தி இயக்குதற்கேற்ற செந் நிற ஆடையினை, உணர்வொளியின் ஆற்றல் வளர்ச்சிக்காகத் தவ வுருவந் தாங்கித் தவம் புரிவார் அணிந்து கொள்ளல் மர பாகும். இவ் வியல்பு 'செய்யன், சிவந்த ஆடையன்' என்ற அழகிய குறிப்பினான் விளக்கமாம். பொதுவாகக் குன்றியும் தவ வுணர்வுக் குரியாரும், செந்நிறத் தோற்றமதைப் புலப்படுத்தி னாலும், இருளை நடுவிற் கொண்ட விளக்கு போன்று, உள்ளத் துள் இருட் பண்பும் அவ நினைவுங் கொண்ட தவ முடையாரை அக் குன்றி மணியின் மூக்கின்வழிப் பிறர்க் குணர்த்தும் வகை

யினை நுட்ப திட்பஞ் செறிய வள்ளுவர் ஓரடி முக்காலில் நயம் பட உவமை யழகும் உயர்வும் விளங்க வைத்துக் கவி நடைக்கே ஏற்ற மளித்தது தவ ஞான முடையார் கண்டு இன்புறற் பாலது. இதனுன் அறிவா ருன்ற அறவோர் தவத்தவரை வடிவு கண்டறியாது அவரவர் செய்யும் வினையின் பகுதியால் அறிய உடன்படுவ ரென்பது புலனுயிற்று.

மக்கள் வாழ்க்கையின் முடிவு, உள்ளத்தினுள்ளே புகுந்து நின்று, யாவற்றையுங் காணும் இறைவனைக் கண்டு இரண்டறக் கலத்தலாதலின், அம் முடிவைத் துறவுள்ளத்தானும், தவ நெறி வாழ்வினுனும் அடைப இயலும். யாஅனென தென்று யாது மின்றி அறுதலுறும் விழுப்ப நிலை, துறவுள்ளத்தின் மாண்பினை மெய்ப்பிக்கும். 'ஓடி யுய்தலுங் கூடுமன், ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே' (புறம்), 'இனனு தம்ம வுலகம், இனிய காண்கி தன் இயல்புணர்ந் தோரே' (புறம்) என்பதினுல் துறவுள்ளத் தின் நிலையும்,

> வையமுந் தவமுந் தூக்கின் தவத்துக்கு
> ஐயவி யனைத்தும் ஆற்ருது. (புறம்)

என்பதினுன் தவத்தின் மாட்சியும், சங்க காலத்தவர் நல்லுலகின் கண் செல்லும் நெறி யெனக் கைக்கொண்டு எத்துணைத் திட்ப நுட்பமாக வுணர்ந்து தமிழக மெங்கும் தவ ஞானமும் துறவற வொழுக்க நெறியும் பரக்க விளங்கின ரென்பது புலனுகும்.

நில வுலக வாழ்க்கையின் நோக்கம் இன்ப மாதலான், முதற்கண் இல்லின்கண் இருந்து வாழ்ந்து அறநிலை செய்வன செய்து பெறும் ஐம்புல இன்ப நுகர்ச்சிகளை நுகர்வதில் வெறுப் புற்று, அதன் நிலையாமை யுணர்ந்த பிறகே, நிலையான உயி ரின்பம் நெறிபட்டு நிற்கும் துறவற வழி புலனுகும் முறை யினைப் பண்டைத் தமிழ்ச் சான்ருேர் செழுமையும் கருணையும் தோன்றப் பலபடப் புகட்டி யுள்ளார்.

> மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
> மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழி
> தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
> தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

எனப்படுவதினுன் துறவு நிலையின் பெற்றி இதுவாதல் துணியப் படும். துறவின் தூய்மை நிலையினை, ஆசிரியர் தொல்காப்பியர், 'காமஞ் சான்ற கடைக் கோட்காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு' வாழும் மக்களே, மெய் வருந்தாமல் திறனுடன் மேற்கொள்ளற் பால ரென்பர்.

அன்பின் வழியது உயிர் நிலை யாதலான், இல்லறத்தினின்று அன்பை வளர்த்துத், துன்பம் துடைத்து, அதன்வழி அருளுடைமை பெற்றுப் பற்றறத் துறவறத்திற் சாரும் நெறியினை, 'அருளென்னு மன்பீன் குழவி' (குறள் 757), 'அருள் வெஃகி யாற்றின்க ணின்றான்' (குறள். 176) என்ற வள்ளுவரது வாக்குகளின்வழிக் குறிப்பா னறியப்படும்.

இயற்கையோ டியைந்து வாழும் வாழ்க்கைக்கு அன்பும் அருளும் இன்றியமையாது வேண்டப்படும. அன்பின் உயிர் இல்லற மெனவும், அருளின் உயிர் துறவற மெனவும், அன்பும் அருளும் வாழ்வுக்கு மெய்ம்மைப் பொருள்க ளெனக் கருதி, வள்ளுவர் மக்கள் வாழ்வுத் துறையினை இல்லற மெனவும் துறவற மெனவும் வகுத்துள்ளார். இப்பகுப்பு, குற ணூலின் போக்கையும் தகைமையையும் நோக்குமிடத்துத், தமிழற வாழ்வுக்குரிய அகமும் புறமும் தெளிவுறுத்துவனவாகிய அறம் பொருளின்பத் துறை யறங்களைத் தமிழ் மரபு வழுவாது அற வாழ்க்கை முறைக் காகுமாறு இயைபு பட எளிதில் அமைந் துள்ள தென்பது ஊன்றி யுணரற் பாலது. இளமைத் துறவி யென்னும் உள்ள முடையாரது துறவு நெறிக்கண் பல கூடா வொழுக்கங்களும் நாடப் படா நடையும் தோன்றும் வாய்ப்பினை யும், இயல்பினையும் வள்ளுவர் தெளிந்து தமிழ் அற நூற் றுணிபு பற்றி, குற ணூலில், முதற் கண் இல்லறங் கூறி முடித்துப், பின் இல்வாழ்க்கையைத் துறந்து மனத்துக்கண் மாசிலா தொழுகும் ஒழுக்க நெறியே துற வற மெனக் கொண்டு, துறவறத்தின் இயலை இயைபு நோக்கித், தமிழ் மரபிற் கேற்ற வா று முறைப்பட உரைக்கும வள்ளுவரின்திறம் பெரிதும் வியக் கற்பாலது. மற்றும் 'குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம், மடிதற்றுத் தானமுந் துறும்' (1023) என வள்ளுவர் புகன்றிருத்தலான், இறை யருளை நாடி இல்லற நெறியில் நிற்பானுக்குக் கடவுட் டன்மை நிலை படிப்படியாகப் புலனுகிய வழிச், செம் பொரு ளுண்மை தேறும் பழகு நெறி வீறிடவே, அப் பழக்க நெறியின் தெளிவு இறுதியில் தவத்தான் மாட்சி மைப்பட்ட துறவு உள்ளத்தின் ஞான நிலைக் காட்சி நிலையினை இன்பச் செறிவுடன் நல்கும். இல்வாழ்க்கையின் வழியிற் சார்ந்து நிற்றல் நீங்கினுர் பெறும இந் நலந்தரு நெறியினை, வள்ளுவர் உடன்பாட்டு முறையானும், எதிர்மறை வகை யானும், வகை யுறுத்தித், தெள்ளிது தேர வைத்த மென்மை குற ணூலின் இயலமைப்பினையும், நூல் செல் முறையினையும் நுகர்ந்து உணர்ந்தவழி, தெளிய விளங்கிக் கிடத்தலான், மக்கட் பிறப்பு மாட்சி மேவுதற்கு, அந் நெறியே உறுதிப் பாட்டுடன் மேற்கொள்ளற்பால தென நுனித் தறியப்படும்.

சாக்ரடீஸ்.

(வேலூர்க் காரழகன்)

சிறந்த உலகம் சிதையாதிருப்பான் வேண்டி சிந்தனைப் பிழம் பெனப் பிறங்கி, அறிவியல் ஒளியை அவனிக் களித் தழகுற வைத்த சிந்தனையாளர் சாக்ரடீஸ், வையகஅறிவியற் கோபுரத்தின் கலை மாளிகையில் மன்ன ரென மாண்புடன் மிளிர்ந்து இறவாத் தன்மையரா யினிதே யிலங்குகிறார்; அவர்தம் சிந்தனை யொளி அவர் மாணவர்கட்கும் அவர் நாட்டிற்குமே யன்றி, மேற் புலத்திற்கும் கீழ்ப் புலத்திற்கும் பெரிதும் வழிகாட்டியாய் விளங்குவதுடன், அவர் கண்ட பேருண்மைகள் பாரில் வாழும் மக்களுக்குப் பல துறைகளிலும் பலனுகின்றன.

வையகத்தில் உவமை யற்று நாடகப் பேரொளி யென்று பெரும் புகழ் பெற்று இன்றளவும் தன்னிக ரில்லாது அவனியி லுலவும் ஷேக்ஸ்பியர், சீரிய ஆங்கிலத் தில் நாடகங்கள் யாத்து, அதில் எல்லையற்ற பொறுமை யுடன் வாழ்வில் பிணைந்துள்ள அவலத்தையும் களிப்பையு மறிவித்து, அவைகளுக்குரிய காரணம், காண வியலா விடத்திற்கு மப்பாற்பட்ட தென்று அனைவரையும் சிந்திக்க வைத்தல் கண்கூடு.

எனவே, சிந்தையும் மொழியுஞ் செல்லா வீட்டின்பத்தினை எய்தற்பாலதற்கு அறங்காத் தொழுகுந் தவ வாழ்வும், துற வுள்ளமும் எத்துணை இன்றியமையாத தென்பதூஉம். தவத் திருவும் துறவுப் பேறும் தலைசிறக்க ஆருயிர் படிப்படியாக அன்பு நிலையினைப்பற்றி அறிவின் உயர் நிலை யெய்தி அரு ளொளி வழிப்படூஉம் மெய்யாறு யாதென்பதூஉம், நல்லற மாகிய இல்லற மென்னும் ஒழுக்கம் பயக்கும் விழுப்பமே தவ வறிவோ டியைந்த துறவறமாகிய மெஞ் ஞான மென்பதூஉம் இவ் வாற்றால் இனிது புலனுகா நிற்கு மென்க.

உலக இலக்கியங்களால் போட்டியிட வியலாது புரையற்ற இலக்கிய முழுமையின் உச்ச நிலை எய்திய டிவைன் காமெடி (Divine Comedy) யை யாத்த மா பெருங் கவி டாண்டே, கிறித்துவ சமய நெறியின் விண்ணுலக வியல்களை இனிதே இயம்பி, புல னெடுக்கத்தையும், விலங்கியல்பி னின்று விலகி வாழ்தலையும், தீங்கு தகைத்துத் தகவுடன் வாழ்தலையும் வற்புறுத்தி, நன்மை தீமை என்ற வாராய்ச் சிக் கணைவரையு மழைத்தேகல் வெள்ளிடை மலை.

நாடக மொழியால் ஷேக்ஸ்பியரும், இன்ப இலக்கியத்தால் டாண்டேயும் மன்பதை உள்ளத்தைக் கொள்ளை கொண்டாலும், இவ் விரண்டினையும் விடுத்து, உரை நடையையும் கொள்ளாது, வெறும் உரையாடலாலே சாக்ரடீஸ் உலகக் கலைக் கோயிலில் உயர்ந்த விடம் பெற்றது பெரும் வியப் பன்றோ! முடிந்த கருத்துக்களைத் தான் வரைய வியலும்; ஆனால் உள்ளத்தில் தோன்று மெண்ணமும், அதன் வளர்ச்சியும், பெருக்கமும், நோக்கமும், முடிபும் உரையாடலொன்றினாலேயே மறைவின்றி அறிய வியலுமாதலால், அம்முறையைச் சாக்ரடீஸ் கையாண்டார் என்று அறியக்கிடக்கின்றோம். இவரால் அவர் பிறந்த கிரீக் நாடு பெரும் புகழடைந்ததுடன் ஏனைய நாடுகளுக்கும் தலைமை நாடாகத் திகழ்கிறது.

இன்றைக்கு 2300 ஆண்டுகட்கு முன்னர் கிரீக் தேயத்தில் பிறந்தார். சிற்பத்தொழில் புரிந்து வந்தவர் இவர் தந்தை. பிள்ளைபெறும் மருத்துவத் தொழில்புரிந்து வந்தவர் இவர் தாய். சாக்ரடீஸ் இளமையிலே அறிவு வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் உரிய நற்கல்வியை நலமுடன் பயின்றார்; அத்துடன் செவிக்கு விருந்தளித்து உள்ளத்தில் களிப்பைத் திகழவைக்கும் இசைக்கல்வியையு மினிதே பயின்றார்.

இளமையி லிளைஞர்களுடன் நலமுடன் பழகி, பேரிலக்கியங்களைப் பெரிதும் பயின்று பீடெய்துவர்; இலக்கிய வின்பத்திற் றோய்ந்து கழிபேருவகை யெய்துவர்; அவர் காலத்து உயர்ந்து விளங்கிய பேரிலக்கியமலர் வனங்களில் நுழைந்து, அவண் மிளிர்ந்தொளிரும் எழில்மலராம் நற்பொருள்களைக்கண்டு உவகையெய்துவர். ஓமர் யாத்த

பேரிலக்கியத்தை நன்கு பயின்று, அதில் மிளிர்ந் தொளிர்ந்த மணிமொழிகளை மொழிந்து மகிழ்வர்; பழம் பெரும் புலவர்கள் பழுநிய அறிவுபெற்று யாத்த நூல் களுள் புதைந்துகிடக்கும் பேருண்மைகளை நண்பர்களுடன் கண்டு, அவ்வுண்மைகளை முன்னிறுத்திப் பெரிதும் சிந் தித்து முன்னேற விழைவர்; அவர் காலத்துப் பெருந் துறவிகளெழுவர் மொழிந்த உயரிய நற்பொருட் கருத்துக் களை ஊன்றிக் கவனித்து, அவர்கள் மொழிந்த 'உன்னை யறிந்துகொள்' என்ற உயரிய வாக்கை இறுகப் பற்றிப் பெரிது மாராய்ந்து, இச்சொற்றொடரை முன் னிருத்தியே அவர் அறிவுரை அறையத் தொடங்கினார்.

எண்ணைப் பற்றிய நல்லறிவும், அறிவியலைப் பற்றிய பேரறிவும், விண்ணியலைப் பற்றிய சீரிய அறிவும், நிரம்பப் பெற்றிருந்தார். அவருக்குமுன் னிருந்த பெரியார்கள் பகர்ந்த நன்மொழிகளி னியல்புகளையும் தெளிவுடனறிந் தார்; இயற்கையி லிர ண்டறக் கலந்து கருத்தியல்களுக் கேகினவர் இவரே. மாலுமிக்கு வானம் வழிகாட்டியா யிலங்குவது போன்றே, இயற்கை யாராய்ச்சி மனிதனுக் கின்றியமையாத தென்றார்.

கல்வியறிவும், இயற்கையறிவும் நிரம்பப்பெற்ற சாக்ரடீஸ், வன்மையும், துணிவும், இரக்க மின்மையும் நிலவுகின்ற இராணுவத்தில் வெறும் சிப்பாயாகப் பதிப்பித் துக்கொண்டு, யுத்த காலத்தில் நாடு மீட்கப் பாடுபட்டார்; வெம்மை, தண்மை, பசி, வறட்சி, இன்னல் இன்ன பிற வற்றைப் பொருட்படுத்தாது, உரமுடன் போரில் விளங் கினார். போர் மூண்டு, முற்றுகை பெரிதும் வலுத்து, நெருக்கடி ஓங்கிக் கடுமையின் கட்டத்தைக்கடக்க முடி யாது நடுநடுங்கிய நேரத்தில் ஒரு பேரன்பரை மீட்ட பெருமைக்கு வீரப்பரிசும் பெற்றார். போர்க்களத்தில் பெருமிதமுடன் போரிட்டு வீரர் என்று விளங்கியதுடன், போர்முறையை வகுத்து, எதிரிகளைத் தோற்கடிக்கத் திட்டம் திட்டுவதில் இராணுவத் தலைவர்களையும் மிஞ்சி னார்.

உரவுள்ளமும், சீரிய ஆராய்ச்சியும், கூரிய அறிவும், சிறந்த சிந்தனையும் ஒருங்கே பெற்றமையால் உண்மை யைக் கண்டு, அறிவியலின் துணையால் பெரிது மாராய்ந்து தெளிவடைவார். எவராயிருப்பினும் குறுக்கு வினாக்களை

விடுத்து, அவர்க ளுள்ளத்தை யறிவதில் பின்வாங்கார். அனைவரையும் அறிவதே ஆண்டவன் ஆணை என்று எடுத்துரைப்பார். உண்மையை மறுத்துத் தீமைக்குப் பல்லாயிர மக்கள் பேராதரவு பெரிதும் அளிப்பினும், உண்மையை நிலைநிறுத்த, நீதியை நிலவவைக்க, சட்டம் சிறப்புடன் திகழ, அஞ்சாது பாடுபடுவர், மலையொத்த எதிர்ப்பாயினும் மனமுடையாது உறுதியுடனெதிர்த்து அஞ்சாது ஆன்ற சான்றுகளுடன் உண்மைகளைக் கூறுவர். பள்ளி மன்றம் நிறுவிப் பகர்ந்தாரில்லை; கலைமன்றம் நிறுவிக் கூறினாரில்லை. தம்மையும் மற்றவர்களையும் ஆராய்ந்தாராய்ந்து, ஏனை யோருடன் உரையாடி உரையாடி, அறிவியலைக் காதலிக்கிறவனென்று கூறி, ஆண்டவன் பணிக்கே தம்மை ஈடு செய்து ஆண்டியானதையும் கூறினார்; புற அழகையும், செல்வத்தையும், பெருமையையும் அறவே வெறுத்து மெய்யறிவை இறுகப் பற்றினார்.

நீதி, பண்பு, ஆட்சி, அரசு, நற்பொருள், கலை, இயற்கை, உயிர், மெய், அறிவியல், இன்ன பிற சொற்களுக்கு முடிந்த விளக்கந் தந்தவர் இவரே. உடலையும், செல்வத்தையும் நோக்காது உடலிலுள்ள உயிர் தூய்மையெய்தலே இன்றியமையாததென இயம்பி, செல்வத்திலிருந்து பண்பு தோன்றவில்லை யென்றும், மனிதனிடத்திருக்கும் நற்பொருள்கள் யாவும் பண்பிலிருந்தே பிறக்குமென்று பண்பின் பெருமையைப் பகர்ந்தார்; வாழ்விற்கு அறிவுதான் அருந்துணை யென அறிவித்தார்.

அறிவுடை யுண்மை மீதே மக்கள் எண்ணம் அமைந்திருத்தல் வேண்டுமென விழைந்தார்; அறிவியலுக்கப்பாற்பட்டு, உணர்ச்சி, கிளர்ச்சி, எழுச்சி இவைகளைக் கொண்டு நடாத்தும் யாவற்றையும் ஏற்காதவர்; பண்பும் அறிவும் பிரிக்க வியலாவென்றும், உயரிய ஒழுக்கத்தைப் போன்றதே அறிவு என்றும், மெய்யறிவை எய்த விழைவதே நற்பொருள் (தத்துவம்) என்றும் கூறினார். மேற் புலத்தில் ஒழுக்கம், அரசியல், அளவை இயல் இவைகளைப் பற்றி முதன் முதலில் மனதில் எண்ணியவர் இவரன்றி வேறெவருமில்லை.

இவருணர்ந்த பேருண்மைகளை, தோல் பதனிடுபவர்களிடத்தும், தோல் அறுக்கிறவர்களிடத்தும், கன்னார வேலைக் காரர்களிடத்தும், கடைச் சந்துகளிலும் கூறுவர்; இவர் கருத்துகள் முதன் முதலில் கடுமையாகவிருப்பினும்,

விளங்கத் தொடங்கிய பின்னர் அறிவின் பெருமையை உணர்ந்து, விளக்கம்பெற்று, பெரும் பொருள்களைப் பற்றி யாராய்ந்து, சிறந்தவர்களாக மக்கள் விளங்கியதுடன், தூய்மை எய்தி தெய்வீக இயலையும் எய்தினர்; இவர்தம் பொன்னுரையை ஏற்றவர்கள் அறிவுப் புரட்சிக் கிரையாகி மாண்பெய்திக் கடவுளியலை யடைந்தார்கள்; எண்ணிலர் இவரைப் பின்பற்றின இளைஞர்கள்; இவர் வார்த்தைகளை இறுகப் பற்றினர்; நம்பிக்கை நலிந்தது; அறிவியல் ஆக்கமுற்றது.

நீதி நூல்களில் தெய்வங்கள் போரிட்டுக் குத்தி வெட்டிக்கொன்ற கதைகளையும் நாட்டு மக்கள் நம்பிய கடவுளையும் அறவே மறந்து, புதிய தெய்வீகக் கொள்கைகளைப் பொது மக்களுக்குக் கூறி, மக்களை மதியுடையவர்களாக்கி, வினுக்கள் விடுத்தே அனைவருள்ளத்தையு மறிந்து, ஏனையோருள்ளத்திலும் அறிவியல் ஒளியை ஏற்றிச், சிறந்தவர்களென்ற பெரியார்களிடத் துரையாடியதால் பெற்ற பெயருக்கேற்ற அறிவு இல்லை என்று அறிந்து, எளிய மக்களே மேலானவர்களென்று மொழிந்து, பேரிடர்ப்பட்டுப் பாக்களை யாத்த பாவாணர்களிட முரையாடுங்கால், அவர்கள் (பாவாணர்கள்) வரைந்ததை அவர்களாலேயே அறிய முடியவில்லை யென்றும், அறியாமலேயே மெய்யறிவின்றிக் குறி சொல்லுபவர்களும், நிமித்தகர்களும் பல சிறந்தவைகளைக் கூறுவதைப் போன்று, இயற்கை ஆற்றலால் பெற்ற உணர்ச்சியால் கூறுவதையே அறியாது பாடுகிறுர்களென்று வருந்தி, பாக்கள் பாடுவதாலேயே அனைத்து மறிந்தவர்களென் றெண்ணினும் மற்றப் பொருள்களைப்பற்றி யறியாதவர்களென்று கூறி, அரசியல் ஒரு உயரிய பெருங் கலை என்றும், அதை நடாத்துபவர்கள் நிரம்பிய அனுபவமும் பேரறிவும் உயரிய திறனும் பெற்றிருத்தல் வேண்டுமென்றும், காணும் முடிபுகளை இலேசாக விடாமல், அறிவில்லா மக்களின் வாக்கெடுப்பிற்கு விடக் கூடாதென்றும் மிக மிக வன்மையாக மொழிந்தார்.

உலக முய்ய அறிவுரை அறைந்த சாக்ரடீசுக்கு நாட்டில் எதிர்ப்புக் கிளம்பி அவர்தம் உரைகளால் இளைஞர்கள் கெட்டுவிட்டனரென்றும், நாட்டினர் நம்பும் கடவுளை அவர் நம்பவில்லை என்றும், நில வுலகிற்குக் கீழுள்ள பாதாளத்தையும், நில வுலகுக்கு மேலுள்ள வானுலகையும் ஆராய்ந்தாரென்றும், கதிரவனைக் கல்

என்று ரென்றும், மதியை மண் என்று ரென்றும், அவர் மீது குற்றம் சாற்றப்பெற்று வழக்கு மன்றத்திற் கிழுக்கையில் அவண் மிகவும் உருக்கமாகவும் நேர்மையாகவும் கூறுகையில் மக்களை அறிவுடையவ ராக்கி மாண்புற வைப்பதே தம் கடமை யென்றும், அவர் நம்பிய கடவுளை மற்றவர்கள் நம்பவில்லை என்றும், கடவுள் மாற்றமில்லாதவ ரென்றும், அறிவு நிரம்பியவ ரென்றும் அனைத்து மறிந்தவ ரென்றும், உரைத்தும் 281 பேர் குற்றவாளி யென்றும், 220 பேர் குற்ற மற்றவ ரென்றும் தீர்ப்புக் கூறியபொழுது மிகப் பொறுமையுடனும் அமைதியுடனுமிருந்து, நல்லவனுக்குத் தீங்கால் உயிருடனிருக்கும் பொழுதும் இறந்த பின்னரும் ஏற்படுவ தெதுவு மில்லை யென்றும், அவனுக்குரிய வாய்ப்புக்களை ஆண்டவன் வழுவ விட மாட்டா ரென்றும், அவரை எய்திய மரணம் திடீரென வராமல் நன்மையை முன்னிட்டே வந்த தென்றும், மரண மென்பது துன்பத்தினின்று விடுதலை எய்துவ தென்றும் கூறி, குற்றம் கண்டவர்கள் மீது தாம் வருந்தவில்லை என்றெடுத் துரைத்துத் தனக்குத் துன்பம் விளைவிக்க வேண்டுமென்றே குற்றம் சுமத்தியமைக்குக் குற்றம் சுமத்தியவர்கள்மீது வருந்துவதாகவும், ஆனல் மரணத்திற்கு மகிழ்வதாகவும் கூறினர்.

கடைசியில், 'ஆனல் இப்பொழுது காலம் வந்துவிட்டது ; ஆதலால் நாம் ஏக வேண்டும். ; நானே இறக்கப் போகிறேன் ; நீங்களோ வாழப் போகிறீர்கள். வாழ்வு அல்லது மரணம் என்பது கடவுள் ஒருவருக்கு நன்கு தெரியும்; கடவுள் ஒருவருக்கே.' என்று வழக்கு மன்றத்தில் பல்லோர் முன்னிலையில் பெருமிதத்துடன் பகர்ந்து புன்முறுவலுடன் பாதுகாப்பாளர் புடைசூழ மனைவி மக்களையும், மாணவர்களையும், நண்பர்களையும் பிரிந்து சிறைக்கோட்டம் நண்ணினர்.

நஞ்சு அயல் நாட்டினின்று வருதற் கொரு திங்களாயினமையால், அதுவரை சிறையிடப்பட்டிருக்கையில் உழுவலன்பர்கள் அடிக்கடி அவருடன் உரையாடுங்கால், தப்பி ஓடுதற்குரிய திட்டங்களைத் தெரிவித்த ஞான்று, அவர் பெரிதும் வருந்தி உளச் சான்றுக்குப் புறம்பாக ஏகாதவ ரென்றும், தப்பினும் தனிமையில் பிற ரறியாது, சிறையினும் கொடுஞ் சிறையில் வாழ்தல் வேண்டுமென்று கூறி அவர் தம் நண்பர்கட்கு நல்லுரை நவின்றனர். மீண்டும்

அவர், தம் நண்பர்கள் அவரை அணுகி அவருடைய மறைவு ஈடு செய்ய முடியாத பெருங்கேடு என்ற பொழுது, மரணத்தை வரவேற்பதாகவும், மரணத்தாலன்றோ உயிர் உடலினின்று விடுதலை யெய்த வியலுமென்றும், மரண மென்பது நிலைத்த உறக்கம் அல்லது மற்ற உலகத்துக்கோ அல்லது மேலானவர்களிருக்கும் நல்லுலகத்துக்கோ செல்லும் யாத்திரை யென்றும் கூறி, மரணத்தைப் பற்றிய ஆராய்ச்சியே நற்பொருளென்றும் (தத்துவம்), உடலி லிருந்து தப்பித்துக் கொள்வதையே நற்பொருளாளர்கள் பெரிதும் விரும்புகிறார்களென்றும், மரணத்திற் கஞ்சுபவர் கள் மெய்யறிவை விரும்பாதவர்களென்றும், உயிரைத் தூய்மையாக்குவதே பண்பு என்றும், உயிரைத் தூய்மை யாக்கினவர்கள் மரணத்திற்குப் பின் கடவுளிடத் திருப்ப ரென்றுங் கூறி, அவரும் கடவுளிடத்திருக்க மரணத்தை மகிழ்வுடன் விரும்புவதாகவே மொழிந்தார்.

அவருடைய மனைவி அருங் குழந்தையை இடுப்பி லணைத்துச் சிறையில் சாக்ரடீசைக் கண்ட பொழுது விழிகளிலிருந்து நீர் பெருக்கத்தோடு கையால் மாரடித்துக் கொண்டு வாய்விட்டலறி 'ஓ! சாக்ரடீசே!! உம்மிடம் நண்பர்கள் பேசுவதும், நண்பர்களிடம் நீர் பேசுவதும் இதுவே கடைசி.' என்று அழுதாள். சாக்ரடீஸ் தன் நண்பரை யழைத்துத் தம் மனைவியையும் குழந்தையை யும் வெளியேறுமாறு ஆணையிட்டார். மீண்டும் நண்பர் கள் மரணத்தினின்று தப்பித்துக்கொள்ள' பெரிதும் வேண்டிய பொழுது. 'எதிர்மறை எதிர்மறையினின் றரும்புகிறது; ஆதலின் உயிர் மரணத்தினின் றரும்புகிறது; அங்ஙன மில்லை யெனின்—மரணம் உயிரினின் றரும்பின், மரணத்தினின்று உயிர் அரும்பவில்லை யெனின், அனைத்தும் கடைசியில் மரணமே,' என்று உயிரின் இறவாத் தன்மையை விதந்தோதினார். சாக்ரடீசு எவ்வளவோ விளக்கி விளக்கி மரணத்தைப் பற்றிக் கூறினும், அவர்தம் நண்பர்கள் மரணத்திற்கு முரண்பட்டிருந்தனர். அடுத்த நாள் நஞ்சருந்த வேண்டிய நிலை ஏற்பட்டதால், நண்ப ரொருவர் அவரைக் காணச் சென்றபொழுது, அவர் உறங்கி யிருந்ததைக் கண்டு வெளியேகி மீண்டும் கண்டு உரை யாடுகையில், சற்று முன்னர் ஒரு தேவ அணங்கு வெள்ளாடை யுடுத்தி விண்ணுலகிற் கழைத்ததாகக் கனவு கண்டதாகக் கூறி களிப்பெய்தினார்.

வையகத்தில் உடலை அழகுற வைக்கும் நகைகளையும் பொருள்களையும் வெறுத்து, இன்புற வைக்கும் கல்வியில் தோய்ந்து உயிரை எழில் பெற வைக்கும் நீதி-பண்பு-விடுதலை-உரிமை-உண்மை இவைகளைத் துணைகொண்டு வாழ்பவர்கள் ஊழி னழைப்பிற்குக் காத்திருந்து மரண மாம் அயலூர் பயணத்திற்கு அஞ்சாது ஏக, கழிபேருவகை யெய்துவ ரென்றார். கடைசியில் நண்பர் முன்னே, மனைவியையும் இரு குழந்தைகளையும் கண்டு கூற வேண்டியவைகளைக் கூறி யனுப்பினர்.

நஞ்சளிக்க நியமிக்கப்பட்டவன், நஞ்சுடன் சாக்ர டீசைக் கண்டு, நஞ்சருந்த வந்தவ ரனைவரும் அவர்கள் மீது சினங்கொண்டு சீறினர்களென்று கூறி, ஆனால் அவர் (சாக்ரடீசு) அங்ஙனமின்றி மிகவும் உயர்ந்தவராகவும்-சிறந்தவராகவும், பெருந் தகைமையுடையவராகவும் விளங்குகிறு ரென்று தேம்பி யழுதபொழுது, சாக்ரடீசு அவ னழுகைக்குப் பெரிது மிரங்கி அவன் மிகச் சிறந்தவ னென்று மொழிந்தார்.

நண்பர்கள் அவரைக் கடைசியாகக் கேட்டபொழுது, 'ஆராய்ச்சியே வாழ்க்கையின் அனுபவம்; ஒரே தன்மை யுடையதாகிய உண்மையும் நன்மையும் வாழ்க்கையின் முடிந்த முடிபு. பொதுமையே உண்மையின் சோதனை. மன மொத்து உசாவுதலே முறை; பகுத்தறிவு ஆராய்ச் சியே துறை' என்று கூறி, நஞ்சை வாங்கி உள முவகை யுறப் பெரிதும் மகிழ்வுட னருந்தும் பொழுது, 'என் யாத்திரை சிறப்புற்றிருக்கவே கடவுளை வேண்டுகிறேன்; இதுவே என் வழிபாடு,' என்று மொழிந்து கடைசியில் அவர் தம் முகத் துணியை விலக்கி ஒரு சேவலை ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமென்றும், அதைக் கட்டாயம் கொடுக்கு மாறு தன் நண்பருக் காணையிட் டின்னுயிர் நீத்தார்.

உயர் உரை உரைத்த-நல்லுரை நவின்ற-சிறப்புரை செப்பிய-அறிவுரை தந்த-பண்புரை பகர்ந்த-உயிரியலை விளக்கிய-இறையியலை இயம்பிய-மரணவியலை மொழிந்த-கலையியலைக் கூறிய-ஒழுக்கவியலை ஒளிர வைத்த-சிந்தனை யைச் செழிக்க வைத்த சாக்ரடீசுக்கு அவர் நாடு நஞ்சை யளித்து உயிரைக் கௌவியதே! அந்தோ உலகமே!!

உ

திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர்
உமாமகேசுவர நடுநிலைப் பள்ளி
தஞ்சாவூர்,

1949—'50 ஆம் ஆண்டு அறிக்கை

மாண்புமிக்க தலைவர் அவர்களே! பெரியோர்களே!

வணக்கம். நலம்.

இச்சிறு பள்ளிக்கும் ஒரு ஆண்டு அறிக்கையா என்பது வியத்தற்குரியதேயாயினும், இந் நன்னாளில், இப்பள்ளியின் இவ்வாண்டு நடைபேற்றின் சிறப்புக் குறிப்புகளைத் தொகுத்து நினைவு கூர்தல் மரபுக்குப் பொருந்துவ தொன்றாம்.

1. மாணவர்—ஆசிரியர்.

சென்ற வேனிற்கால விடுமுறைக்குப்பின் இவ்வாண்டு *13—6—1949* அன்று பள்ளிக்கூடம் தொடங்கியது. வழக்கம் போல முதற் படிவத்தில் புதுப்பிள்ளைகள் வந்து சேர்ந்தார்கள். பள்ளிக்கூடம் தொடங்கியது முதல், முதலிரு படிவங்களில் இரண்டிரண்டு பிரிவுகளும், மூன்றும் படிவத்தில் ஒரு பிரிவும் ஆக ஐந்து வகுப்புக்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் 40 பிள்ளைகளுக்குமேல் இருந்துவருகின்றார்கள். தற்போது பள்ளிக்கூடத்தில் மொத்தம் 208 பிள்ளைகள் இருக்கின்றார்கள். இவர்களுள் பெரும்பாலானவர்கள் கல்வித்துறையில் பிற்போக்குடைய (Backward) இனங்களையும் அரிசன வகுப்பையும் சேர்ந்தவர்கள். இவர்களுள் 32 பேர்கள் மாணவர் இல்லத்தில் இருப்பவர்கள். சென்ற ஆண்டிற்போலவே இவ் வாண்டிலும் மொத்தம் 8 ஆசிரியர்கள் பணியாற்றி வந்திருக்கின்றார்கள்.

2. பாட நடைமுறை.

மாறிக்கொண்டு வருகின்ற பாடதிட்டங்களுக்கேற்ப ஆசிரியர்கள் அரிதின் முயன்று, ஆகும் வழியில் தாம் தாம் ஏற்றுக்கொண்ட பாடங்களைக் கற்பித்து வருகின்றனர்.

ஆண்டுத் தொடக்கத்தில் இரண்டாம் படிவத்துக்கும் ஆங்கிலம் உண்டென அமைந்தது. சென்ற ஆண்டு முதற் படிவத்தில் ஆங்கிலப் படிப்பில்லாத சிறுவர் ஆங்கில அறிவு பெறவும், முதல், மூன்றும் படிவப்பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தேர்ச்சித் திறனைப் பெருக்கவும் இரு திங்கள் ஆங்கிலச் சிறப்பு வகுப்பு ஒன்று மாலை வேளைகளில்

நடைபெற்றது. முறையான திட்டப்படி ஒழுங்காக நடைபெற்ற அப்பயிற்சி நல்ல பயன் அளித்திருக்கின்றது என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

3. குடிமைப் பயிற்சி,

புதிய பாடத்திட்டத்தின்படி குடிமைப் பயிற்சி முறைகள் அன்றாட நியதிகளுள் பொருந்தி அமைந்து, சிறந்த நிலையடைந்துள்ளன. மாணவர்கள் இப்பயிற்சிகளில் முறையாக ஈடுபடுவதால், அவர்கள் தமக்கு வேண்டுவனவற்றைத் தாமே செய்துகொள்ளவும் தம்மைத் தாமே சீர்திருத்தி ஒழுங்கு படுத்திக்கொள்ளவும், பயிலுவதுடன், வருங்காலத்தில் அவர்கள் எல்லோரும் "இந்நாட்டு மன்னராக" த் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளவும் வேண்டிய பயிற்சி பெறுகின்றார்கள். குடியரசுக் காலமாகிய இற்றை நாளில் மக்களின் வாக்கு (Vote), தேர்தல் (Election), சட்டம் (Act), சட்ட மன்றம் (Legislature) சட்டமியற்றல் (Enacting a Bill) முதலியவற்றின் பொறுப்பு, நேர்மை, ஒழுங்கு, முதலியன பிள்ளை உள்ளத்தில் நன்கு பதிய மாணவர் ஆட்சி மன்றத்தினரின் அலுவல்கள் இடமளிக்கின்றன. ஆசிரியர்களின் பார்வைக்குட்பட்டு ஒழுங்கு கடவாது நடைபெறும் இம்மன்ற நிகழ்ச்சிகளில் மாணவர் கொள்ளும் ஆர்வமும், உற்சாகமும் குறிப்பிடற்குரியன,

4. ஆட்சிமன்றம்—வகுப்பாயங்கள்.

இப்பள்ளி மாணவர் ஆட்சி மன்றத்தார் இந்த ஆண்டில் மும்முறை கூடி (1) மாணவர் ஒழுங்குமுறைச் சட்டம் (2) மாணவர் நல்வாழ்க்கைச் சட்டம் (3) மாணவர் படிப்புமுறைச் சட்டம் என்னும் மூன்று சட்டங்களை நிறைவேற்றி இருக்கின்றார்கள். இச்சட்டங்களை நடைபேற்றிலமைக்க ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்கள் அணி அணியாக வகுக்கப்பெற்று முறையான அலுவல் நியதிகளுடன் பணியாற்றி வந்திருக்கின்றார்கள். தாமே சட்டமாக்கும் வரையறைகளை மீறி அல்லது மாறி நடப்பவர்களை வழிப்படுத்தி, ஒழுங்குமுறை நடவடிக்கைகள் எடுக்க, வகுப்பு ஆயத்தார் அன்றாடம் கூடி ஆவன செய்து வந்துள்ளார்கள்.

5. தோட்டவேலை.

மாணவர் முயற்சிகளைக்கொண்டே இவ்வாண்டு பள்ளியின் அலுவல்கள் பலவும் நடைபெற்று வந்திருக்கின்றன, நம் பள்ளியில் தொழிற்கல்வியாகிய தோட்டவேலையில் மாணவர்கள் மேற்கொண்ட ஆர்வமும் உழைப்பும் மிகுதியும் பாராட்டத்தக்கன. அவர்களுடைய ஓயாத உழைப்பினாலேதான் சென்ற ஆண்டில் இருந்ததைவிட அதிகமாகத் தோட்டம் அமைத்துக் கறி காய்கள் கீரை வகைகள் பயிர் செய்ய வியன்றது. பள்ளி முன்னிடம் முழுதும் தூய்மை செய்யப்பெற்று இயலும் வகையில் ஆங்காங்கு பூச்செடிகளும்

பசுமைச் செடிகளும் பயிர் செய்யப் பெற்று, கண்ணுக்கு இனிமையும் தூய்மையும் உள்ளதாக அமைக்கப்பெற்றுள்ளது. பள்ளிக்கூடத்தின் அண்மையில் வாழும் நகர்ப் பெருமக்கள் தங்கள் கன்று காலிகளைக் கட்டவிழ்த்து விடாமல் உரிய வழி அவற்றைக் காக்க முற்படின் எங்கள் சின்னஞ்சிறு பிள்ளைகள் அமைக்கும் தோட்டங்களும் பூங்காவும் செழித்து வளரும் என விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

6. தேர்வுகளும் தேர்ச்சியும்.

மாணவர்களின் அறிவுத்திறன் சோதனையாகக் காலாண்டு, அரையாண்டு, ஆண்டுத் தேர்வுகள் மூன்றும், அவ்வப்போதும் வாராவாரம் சிறு சோதனைகளும் நடந்திருக்கின்றன. தேர்வுக்குத் தேர்வு பிள்ளைகளின் திறன் ஓரளவாவது சிறந்திருக்கின்றது என்று நிச்சயமாகத் தெரிவிக்கின்றோம். இத்தேர்வுகளில் எல்லாம் மாணவர் இல்லத்துப் பிள்ளைகளே முன் தரங்களில் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவிக்கின்றோம். தேர்வுகளுக்குப் பின் முறையான தேர்ச்சி அறிக்கைகள் பெற்றோர்களின் பார்வைக்கு அனுப்பிவைத்திருக்கின்றோம். ஆண்டுத் தேர்வின் முடிவாக மேற் படிவங்களுக்குத் தேர்ச்சி பெற்று மாறும் மாணவர்களின் விவரங்கள் அண்மையில் அறிவிக்கப் பெறும்.

7. இந்திய உரிமை நாள்.

இவ்வாண்டுத் தொடக்கத்தில், ஆகஸ்டு, 15உ யன்று இந்திய உரிமை நாள் நம் பள்ளியில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அந்த நாளை முன்னிட்டுத்தான் எங்கள் பள்ளிகளின் ஆட்சியை திருவாவடுதுறை ஆதீனத்தார் மனமுவந்து ஏற்றருளினார்கள். அந்த நன்னாளில் மாணவர்கள் எல்லோரும் முறையான பாடல்களுடன நாட்டுக் கொடிபிடித்து நகர்வலம் வந்தார்கள். பள்ளிக்கூடத்துக்குத் திரும்பியதும் நாட்டுக் கொடியேற்றம், கொடிவணக்கம், அற்றை நாட் சிறப்புப் பற்றிய சொற்பொழிவுகள் எல்லாம் நடைபெற்றன. மாணவர்களுக்கு உயர்ந்த இனிப்புப் பண்டங்கள் வழங்கப் பெற்று அற்றை நாள் விழா நிறைவேறியது. அன்று நம் பள்ளிச் சாரணர்கள் தஞ்சை நகர்ச் சாரண அணிவகுப்பில் கலந்து கொண்டார்கள்.

8. கலைமகள் விழா.

அடுத்து நடந்த கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலைமகள் விழாப் பத்து நாள் நிகழ்ச்சிகளிலும் இப்பள்ளியின் மாணவ மாணவிகள் தங்கள் தங்கள் சின்னஞ் சிறு ஆற்றல்களைப் பயன்படுத்தி அவையினரை மகிழ்விக்கும் பேறு பெற்றார்கள். இவர்களுடைய இயல், இசை, நாடகத் திறன்களைப் பாராட்டி உயர்ந்த பரிசுகளும் பொற்பதக்கங்களும் சங்கத்தார் மனமுவந்து அளித்தார்கள். மாணவ மாணவிகட்கு இடந் தந்தமைக்கும், அவர்கட்குப் பரிசுகள் அளித்தமைக்கும், சங்கத்தாருக்கு இப்பள்ளி பெரிதும் கடமைப் பட்டதாகும்.

9. "அம்பலவாணர்", "புனிதவதியார்" கழகங்கள்.

மாணவ மாணவிகளின் மொழிவளர்ச்சிக்கு இடமளிப்பதற்காக இரு கழகங்கள் நவம்பர் கடைசியில் தோற்றுவிக்கப்பெற்றன. மாணவர்களின் கழகத்துக்கு **அம்பலவாணர் கழகம்** எனவும் மாணவிகளின் கழகத்துக்குப் **புனிதவதியார் கழகம்** எனவும் பெயர்கள் அமைந்தன. இக்கழகங்களின் கால்கோள் விழா தஞ்சை மாவட்டக் கல்வித்துறைத் தலைவரவர்களுடைய உடன்துணையாளர் திருவாளர் S. வடிவேற்பிள்ளை B. A., L. T., அவர்கள் தலைமையில் நடந்தது. திருமதி புட்பம் நடராசன் அம்மையாரும், திருமதி வித்துவான் பிருந்தா தேவியும் விழாவுரைகள் நிகழ்த்தினார்கள். உள்ளூர் அறிஞர்கள் பலரும் கழகங்களின் பெயர்ச் சிறப்புப்பற்றியும் கழகங்களின் இன்றியமையாமை பற்றியும் பேசி வாழ்த்தினார்கள்.

தலைவரவர்களும் பல அறிவுரைகளுடன் **அம்பலவாணர் அருள்** என்னும் பொருள் பற்றிப் பேசி நாளுளும் இக்கழகங்கள் செழித்தோங்குக என்று வாழ்த்துரை வழங்கினார்கள்.

10. வார வழிபாட்டு விழா.

சங்கத்துக்குச் சென்னை ஆட்சியாளர் வருகையை முன்னிட்டு இங்கு வந்திருந்த தருமபுர ஆதீனம் மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நம் பள்ளி மாணவ மாணவிகளின் கழகங்களின் சார்பில், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் எழுதிய **வார வழிபாடு** என்னும் தருமபுர ஆதீன வெளியீட்டை வெளியிட விரும்பினார்கள். அதன்படி *2—12—49* அன்று ஒரு கூட்டம் நடந்தது. ஆட்சியாளர் வருகையை முன்னிட்டுத் தற்செயலாய் அங்குவந்த தஞ்சை மாவட்டக் கல்வித்துறைத் தலைவர் திருவாளர் A. V. தியாகராச ஐயர், M. A., L. T. அவர்கள் மாணவர்கள் நற்பேற்றின் பயனாக அக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்றருளினார்கள்.

தருமையாதீன மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் **வார வழிபாடு** என்னும் பொருள் பற்றிப் பேசி, நூலையும் வெளியிட்டு வழங்கினார்கள். தலைவரவர்கள் வார வழிபாட்டின் சிறப்பு, வெளியிட்ட நூலின் பெருமை, அதன் ஆசிரியர் பெருமை முதலியன பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லி, அதனை **"ஒரு நன்னாள்"** என்று கூறி மாணவ மாணவிகளை வாழ்த்தி ஊக்குவித்தார்கள். சென்னை ஆட்சியாளர் வருகையை முன்னிட்டு வந்திருந்த பெரியார்கள் பலரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் இடையிடையே தேவாரப்பாக்கள் ஓதப்பெற்றன.

11. "உமாமகேசுவரன்" திங்கள் வெளியீடு

தமிழ்த் தாயின் தவப்பிள்ளையாய்த் தமிழுக்கும், மக்களுக்கும் அரும் பெருந் தொண்டாற்றிய தமிழவேள் த. வே. உமாமகேசுவரம்

பிள்ளை யவர்களின் பெயரே நம் பள்ளிக்கு அமைந்திருப்பது போல வே அவர்கள் பெயரால் ஒரு இதழையும் மாணவர்கள் முயற்சியால் திங்கள் தோறும் வெளியிடல் தகுதி எனக் கொண்டு, டிசம்பர் திங்களில் அப்பணி தொடங்கினோம்.

அதன் முதல் இதழை, திருவையாறு டிஸ்ட்ரிக்ட் முன்சீபு (தற்போது கோவை சப்ஜட்ஜ்) திருவாளர் இராசாபாதர் உடையார் அவர்கள் தலைமையில் திருவாசகமணி திருவாளர் K. M. பாலசுப்ர மணியம் B. A., B. L. அவர்கள் வெளியிட்டு வாழ்த்தினார்கள். தஞ்சை சப் மாஜிஸ்திரேட் திரு. இராமச்சந்திரப் பத்தர் B.A. அவர்கள் இத் தொண்டினைப் பாராட்டிப் பேசி இவ்விதழ் அச்சாகும் நிலைமைக்கு அண்மையில் வரவேண்டும் என மனமொன்றி வாழ்த்தினார்கள்.

இத்தகைய ஆக்க உரைகளால் வரம் பெற்ற மாணவ மாணவி கள் திங்கள்தோறும் முறையாகக் கட்டுரைகள், கதைகள், விடுகவி கள், ஓவியங்கள், முதலியன சேர்த்து, இதுவரை நான்கு இதழ்கள் வெளியிட்டுள்ளார்கள். ஐந்தாவது சித்திரை இதழ் வெளிவர ஆயத்த மாகின்றது.

இவ்வலுவலில் ஈடுபடுவதால் மாணவ மாணவிகளுடைய கற் பனை, வருணனைத் திறன் உருவாகின்றன. திருத்தமாகக் கருத் துக்கள் பலவற்றை எழுதும் ஆற்றலும் அமைவது கண்கூடு.

12. திருவள்ளுவர் விழா.

5—2—50 அன்று திருவையாறு அரசர் கல்லூரித் தலைவர் திருவாளர் திருஞான சம்பந்தம்பிள்ளை யவர்கள், M. A., L. T., தலைமை யில் திருவள்ளுவர் விழா நடைபெற்றது.

ஒப்பனை செய்யப்பெற்ற திருவள்ளுவர் படத்துடன் மாணவர் கள் அணிவகுத்துத் திருக்குறட் பாக்களை ஓதிக்கொண்டு நகர் வலம் வந்தார்கள். திருவள்ளுவர் படம் தமிழ்ப்பெருமன்றத்திற்கு எழுந்த ருளுவிக்கப்பெற்றது.

விழாவை முன்னிட்டு நடைபெற்றிருந்த திருக்குறள் சொற் பொழிவு, கட்டுரைப் போட்டிகளில் தேர்ந்த மாணவ மாணவிகள் திருக்குறட்பாக்களை ஒப்புவித்தார்கள்; சொற்பொழிவும் நிகழ்த்தி னார்கள்.

திருக்குறட்பாக்கள் கொண்ட இசையரங்கு, கும்மி, கோலாட் டம், நடைபெற்றன.

கரந்தைக் கவியரசு திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளை யவர்கள் "திருவள்ளுவர்" பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

தலைவரவர்கள் விழாவின் சிறப்பு, அது நடைபெற்ற முறை முதலியவற்றைப் பாராட்டிக் கூறி, மாணவ மாணவிகளின் இலக்கி யத்தேர்ச்சியின் உயர்வையும் பற்றிப் பாராட்டினார்கள்.

13. கழகங்களின் வாரக் கூட்டங்கள்.

கழகங்கள் வாரந்தோறும் கூடி இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்த்துறைகளிலும் மாணவ மாணவிகட்கு உயர்ந்த பயிற்சி அளித்திருக்கின்றன. மாணவர் கூட்டங்கள் 18ம், மாணவிகள் கூட்டங்கள் 18ம், ஆக 36 கூட்டங்கள் நவம்பர் முதல் மார்ச்சுவரை நடைபெற்றிருக்கின்றன. இக்கூட்டங்களில் ஆசிரியர்களே தலைமை ஏற்று நடத்தியிருக்கின்றார்கள். மாணவ மாணவிகளின் திறமை, முன்னறிவுக் கேற்ப, கழகங்கள் தோன்றிய காலத்தே வகுக்கப்பெற்ற ஒரு திட்டத்தின்படி வாரக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றால் பிள்ளைகளுடைய தனித்திறன்கள் வெளியாகிப் பண்படுவதுடன் பலர்முன் அச்சமும் கூச்சமும் இன்றிப் பேசவும், பாடவும், நடிக்கவும் பழகியிருக்கின்றார்கள். இவற்றின் பயன் வருங்காலத்தில் பாங்குற அமையும் என்பது திண்ணம்.

அன்றியும், அமைதி காத்தல், ஒழுங்கு, தூய்மை, அடக்கம், முதலிய நற்பண்புகள் மாணவர்களிடம் அமைய இக்கூட்டங்கள் வாய்ப்பளிக்கின்றன. விழா நாட்களில் மாணவ மாணவிகள் நெடு நேரம் அமைதியுடன் இருந்து வந்தமையைப் பாராட்டி விழாத்தலைவர்கள் ஒவ்வொருவரும் குறிப்பிட்டமை மாணவர்களுக்குப் பெரிதும் ஆதரவளித்து, அப்பெருமையைக் காத்துக்கொள்ளப் பின்னும் உன்னிப்பாயிருக்கப் பிள்ளைகளைத் தூண்டுவதாயிற்று. எனவே இலக்கியப் பயிற்சி மட்டுமேயன்றி ஒழுங்கு முறைகள் பயிலவும் இக்கழகங்கள் பெரிதும் உதவி வருகின்றன.

14. வெளியே போய்ப் பார்த்தறிதல்.

வெளியே போய் இடங்கள் தொழில்கள் முதலியன பார்த்தறிய மாணவ மாணவிகள் இருமுறை அழைத்துச் செல்லப்பட்டார்கள். 8—2—50 அன்று விண்ணாற்றங்கரையில் கைக் காகிதத் தொழிற்சாலைக்குப் போனார்கள். அங்கு, காகிதத் தொழில் நடைபெறும் முறைகளைக் கண்டறிந்த பின், நகர் நீர்க் குழாய் நிலையத்திற்குப் போனார்கள். அங்கு நீர் வடிகட்டும் முறை நீர் பாய் குழாய்கள் முதலியன பார்த்த பின், மர நிழலில் மாணவர் மன்றத்தார் கூடி "மாணவர் நல் வாழ்க்கை" சட்டத்தை இயற்றினார்கள். சாரணப் பயிற்சிகளும் நடைபெற்றன. பிறகு அமைதியுடன் பள்ளிக்குத் திரும்பிவந்தார்கள்.

3—3—50-ல் தஞ்சை கீழவாசல் யானைமார்க் சோப் தொழிற்சாலைக்குப் போனார்கள். அங்கு சோப் செய்யும் முறைகளைப் பார்த்துப்பின், மின் ஆற்றலால் எண்ணெய் ஆட்டும் இயந்திரங்கள் வேலை செய்வதைப் பார்த்தார்கள். தொழிற்சாலைப் புரவலர் எங்களைப் பண்புடன் வரவேற்றுப் பிள்ளைகள் அனைவருக்கும் யானை உருவான சோப் கட்டிகள் கொடுத்தார்கள். அவர்கட்கு எங்கள் நன்றி.

15. கல்வித்துறைத் தலைவர் பள்ளிச் சோதனை.

இவ்வாண்டு பள்ளிச் சோதனை மார்ச்சு 29, 30 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்றது. பள்ளியின் இவ்வாண்டு நடைபேற்றின் தன்மைகளையும். பிள்ளைகளின் படிப்பறிவையும் விவரமாகச் சோதித்துப் பின் எங்கட்கு ஆக்க உரைகள் பல சொல்லி எங்களை ஊக்குவித்தார்கள்.

16. பள்ளியின் வருங்கால உயர்வு.

கல்வித் துறைத்தலைவரவர்கள் நல்லெண்ணத்தின் பயனாகவும் எங்கள் புரவலர் அவர்கள் அருட்டிறத்தாலும், தாளாளர் அவர்களுடைய இடையரு ஊக்கம், உழைப்பு, திண்ணிய உறுதி, முதலியவற்றின் பயனாகவும், வருகிற ஆண்டு முதல் இப் பள்ளிக்கூடம் மேன் மேலும் உயர்ந்து ஓர் உயர் நிலைப் பள்ளியாகவும் சிற்சில ஆண்டுகளில் ஒரு கல்லூரியாகவும் (Arts College) கூட அமையும் தரத்தில் செல்லுகின்ற தென்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றனம்.

இப் பள்ளியின் உயர்வுக்காவன அனைத்தும் அரசியல் கல்வித் துறைத் தலைவர் அவர்களும், எங்கள் புரவலர் அவர்களும், தாளாளர் அவர்களும் மனமுவந்து செய்து வருகின்றார்கள் என்பதையும் வெளிப்படையாக மகிழ்வுடன் அறிவிக்கின்றோம்.

ஆண்டவன் திருவருள் வலனும், எங்கள் தலைவர்கள் திருவுள வலனும் கூட்டும் முயற்சியால், இப்பள்ளியின் முன்னேற்றத்தில், எங்கள் உழைப்பினால் ஆவன அனைத்தும் செய்ய ஆர்வமுடன் இருக்கின்றோம் என்பதையும் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

தலைவர் அவர்களே! பெருமக்களே!

இவ்வாண்டில் எங்கள் அலுவல் துறையில் நாங்கள் செய்யாது விட்டன பல இருக்கலாம்! செய்தவற்றுள்ளும் குற்றங்களும், குறைகளும் இருக்கலாம்! நாங்கள் செய்ய நினைத்தும் செய்ய இயலாமற் போனவையும் இருக்கலாம்! ஆயினும் நாங்கள் எங்கள் மனம் மொழி, மெய்களால் செய்யக்கூடிய அனைத்தும் வஞ்சனையின்றிச் செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவராகின்றோம்.

எங்கள் ஊதியத்துறையை ஒரு தொழில் துறையெனக் கணக்கிட்டுவிடாமல் இத்துறையின் பெருமையனைத்தையும் ஒருங்கே நன்குணர்ந்து இதனை ஒரு சீரிய தொண்டாகக் கொண்டு உழைக்க முன் வந்துள்ள நாங்கள், எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிள்ளைகளை நல்வழிப் படுத்தி அறிவினராக்கும் தூய புனிதமான சீரிய பணியை வழுவின்றி ஆற்றுவதில் எவ்வித இழுக்கும் வாராமல் நடந்து கொள்ள

நாங்கள் என்றும் உன்னிப்பாய் இருக்கின்ருேம் என்பதைப் பணிவுடன் அறிவிக்கின்ருேம்,

எங்கள் வாழ்க்கை வழிக்கு ஆவனவும், பள்ளியின் தேவைக்கு வேண்டுவனவும் தயக்கமின்றி மனமுவந்து செய்து கொடுத்து எங்களை உயர் வழியில் நடத்தும் எங்கள் புரவலராகிய திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து 20-வது மகா சன்னிதானம் அருட்டிரு அம்பலவாண தேசிக சுவாமிகள் அவர்கட்கும், மகாசந்நிதானமவர்களின் பிரதிநிதியாக இங்கிருந்து எங்கள் பள்ளியின் பணிகளைப் பழுதறப் பார்த்துவரும் தாளாளர் அவர்கட்கும் எங்கள் பணிவான அஞ்சலி செலுத்துகின்ருேம். எங்கள் பள்ளியினை முறையே சோதித்து ஆக்க அறிவுரைகள் கூறி எங்களை உரிய வழியில் செலுத்தும் தஞ்சை மாவட்டக் கல்வித்துறைத் தலைவரவர்கட்கும் அவர்கள் உடன் துணையாளரவர்கட்கும் எங்கள் வணக்கமும் என்றும் மாறு நன்றியும் பணிவுடன் விண்ணப்பிக்கின்ருேம். எங்கள் பள்ளியின் பல அலுவல்களிலும் ஈடுபட்டு இங்கு வந்து எங்கள் அலுவல்களைக் கண்டு மகிழ்ந்தருளி எங்களை ஊக்குவிக்கின்ற மாபெரும் மக்கள் பலர்க்கும், எங்கள் மாணவ மாணவிகட்குப் பரிசுப் பொருள்கள் வழங்கிய கொடையாளர்கட்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

இப் பள்ளியின் அலுவல்கள் ஒன்று பலவாகப் பெருகிய காலத்தும் சிறிதளவுகூடத் தளர்ச்சியும் சோர்வுமின்றி ஒருகட்டாக மனஞ்சலிக்காமலிருந்து பெருமிதத்துடன் பணியாற்றிவரும் ஆசிரியர்கள், எழுத்தாளர் ஆகியவர்களைப் பாராட்டுகின்ருேம்,

பள்ளியின் கட்டுப்பாடு ஒழுங்குமுறை படிப்புமுறை ஆட்சிமுறை பணித்திறன் முதலியவற்றில் ஆசிரியர்கள் அமைக்கும் வழி அவற்றைத் தாமே செய்துகொண்டு சீர்பெறப் பழகி ஒழுகிவரும் மாணவ மாணவிகளை வாழ்த்துகின்ருேம்.

நம்முடைய பிள்ளைகள் சான்ருேராகும் வகைக்கு அவர்களை சீரிய நேர்மையான வழியில் பயிற்றி அவர்கள் வாழ்க்கையைச் செப்பம் செய்வதில் எங்களுடன் ஒத்துழைத்துவரும் பெற்ருேர்களாம் உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

எல்லோரினும் எல்லாவற்றினும் எந்நிலையினும் மேம்பட்டு உயர்ந்து நின்று அவரவர் தகுதிக்கேற்ப அவரவரை இயக்குவிக்கும் ஆண்டவன் அருள்திறத்திற்கு அஞ்சலி செய்கின்ருேம்.

'எம் கடன் பணிசெய்து கிடப்பதே'

இங்ஙனம்

கரந்தை. 16—4—50

சோ. திருநாவுக்கரசு, B. A., L. T.,
தலைமை ஆசிரியர்.